பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 06 வெள்ளிக்கிழமை 22.11.2019 கதிர் 17

இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்ற உறுப்பினரும் ராஜபக்ஷக்களின் வாரிசு உரிமையில் அடுத்த தலைமுறையில் முன்னணியில் இருப்பவருமான நாமல் ராஜபக்ஷ புதிய 'கண்டு பிடிப்பு' ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கை பக்கம் 02

## புதிய அமைச்சரவை இன்று பதவியேற்பு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை இன்று காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கும் அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன.

டக்ளஸ் தேவானந்தா, ஆறுமுகம் தொண்டமான் ஆகிய இருவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## தம்பி முன்னிலையில் பதவியேற்றார் அண்ணன்!

கொழும்பு, நவ. 22

இடைக்கால அரசின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ, நேற்று தனது சகோதரரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப் பக்கம் 03





# தமிழர்களின் வேணவாக்களை நிறைவேற்றக்கூடியவாறு தீர்வு

## கோட்டாவிடம் நேரில் வலியுறுத்தியது இந்தியா

புதுடில்லி, நவ. 22

தமிழ் மக்களின் வேணவாக்களை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வொன்று காணப்படுவதை உறுதிப்படுத்துமாறு புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இந்தியா நேரடியாக வலியுறுத்தியது என்று அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

கொழும்புக்கு கடந்த புதன்கிழமை வருகை தந்த இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். பக்கம் 03



## எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ரணிலும் சஜித்தும் குடுமிப்பிடி!

கொழும்பு, நவ. 22

நாடாளுமன்றின் பிரதான எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவை நியமிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் 03

## எதிர்க்கட்சித் தலைவர் யார் என்று சபாநாயகர் தீர்மானிக்கமுடியாது!

### அதனை ஐ.தே.கவே பார்த்துக்கொள்ளட்டும் எனக் கை கழுவிவிட்டார் கரு ஜயசூரிய

கொழும்பு, நவ. 22

எதிர்க்கட்சித்தலைவர் யார் என்பதை நாடாளுமன்றத்தில் சபாநாயகரால் தீர்மானிக்க முடியாது எனச் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். பக்கம் 03

## தமிழ் மக்களின் வேதனை தேர்தல் மூலம் புரிகின்றது


### கூறுகின்றார் கெஹலிய



கொழும்பு, நவ. 22

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது தமிழ் மக்களின் வேதனை எங்களுக்குப் புரிகின்றது. அந்த பக்கம் 03

## அலரி மாளிகையிலிருந்து நேற்றே விடை பெற்றுச் சென்றார் ரணில்!





கொழும்பு, நவ. 22

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் பதவியில் இருந்து விலகும் கடிதத்தை நேற்றுக் காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவிட்டு அலரி பக்கம் 03

## பிரதமரின் செயலாளராக காமினி செனரத் நியமனம்



கொழும்பு, நவ. 22

பிரதமரின் செயலாளராக காமினி செனரத் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது, ஜனாதிபதியின் பக்கம் 03

## பி.பி.சிக்கு எதிராகப் போராட்டம்!




கொழும்பு, நவ. 22

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவரை 'தமிழ் இன ஒழிப்புக்கு காரணமான இராணுவத் தலைவர்' என பி.பி.சி. செய்தி நிறுவனம் விபரித்தமைக்கு எதிராக நட பக்கம் 03




## போலிச் செய்திகளை நம்பாதீர்!

### ஜனாதிபதி கோட்டா கோரிக்கை

கொழும்பு, நவ. 22

சமூக வலைத்தளங்களில் வெளியாகும் போலியான செய்திகளை நம்ப வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தான் வெளியிட்ட அறிக்கை பக்கம் 03

## கிழக்கு ஆளுநராக திஸ்ஸ விதாரண?

கொழும்பு, நவ. 22

கிழக்கு மாகாண ஆளுநராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண நியமிக்கப்படவுள்ளார் என்று தெரியவருகின்றது.

பக்கம் 03

# கோட்டாபயவின் 'இலங்கையர்' என்ற சொல்லாடல்படி சிங்கள,பௌத்தத்துக்குள் தமிழர்கள் கரைந்து போவதா?

## முடியாது என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



யாழ்ப்பாணம்,நவ.22

**நவம்பர் 19, 2019 அன்று கோட்டாபய ராஜபக்ஷ கூறிய 'இலங்கையர்' என்ற பதம் தமிழ் மக்கள் சிங்கள – பௌத்த நாடு எனும் அடையாளத்திற்குள் கரைந்து போகும் பாதையைச் சுட்டிக் காட்டுவதாகவே அமைந்துள்ளது. அவரது கருத்தை எப்போதும் தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏற்றுக் கொள்ளவும் முடியாதெனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் தனது முதலாவது உரையில் சிங்கள மக்களின் வாக்குகளால் தான் ஜனாதிபதித் தேர்தலில் வென்றார் என்றும், தமிழ், முஸ்லிம் மக்களைத் தனக்கு ஆதரவு வழங்குமாறு கேட்ட போதும் அவர்கள் வாக்களிக்க மறுத்து விட்டனர் எனக்கூறினார். அத்துடன் அனைவரும் இலங்கையர் எனும் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தன்னுடன் இணையுமாறு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அழைப்பும் விடுத்திருந்தார்.

இது தொடர்பில் கஜேந்திரகுமார் மேலும் தெரிவிக்கையில் –

எங்களைப் பொறுத்த வரை கோட்டாபயவின் கருத்துடன் நாம் இணங்க முடியாது. தற்போதுள்ள இலங்கை அரசு மட்டும் பிரச்சினைக்குரியதொரு விடயமல்ல. தனிப்பட்ட ரீதியில் கோட்டாபய ராஜபக்ஷ கூடப் பொறுப்புக் கூற வைக்க வேண்டியதொரு நபராகவுள்ளார்.

கோட்டபாய ராஜபக்ஷவின் கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பிலொரு சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட்டு அந்த விசாரணையில் அவரொரு குற்றவாளி அல்லஎன்ற விடயம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் மாத்திரம்தான் அவர் தொடர்பாகத் தமிழ்மக்களொரு மாற்றுச் சிந்தனையை நோக்கிச் செல்வது பற்றிச்பரிசீலிக்கலாம்.

சிங்கள தேசத்துடன் தமிழ்த் தேசம் இணைந்து பயணிப்பதில் எந்தவிதமான தடைகளும் இருக்கக் கூடாதெனில் தமிழ்த்தேசம் அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்த் தேசத்தின் இருப்பு அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்த்தேசம் பாதுகாப்பாக இந்தத் தீவிலிருக்கலாம் என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரம்தான் அந்தப் பயணம் நேர்மையானதும், உண்மையானதுமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய கீத விடயம்: வாசுதேவ விளக்கம்

இலங்கையின் தேசிய கீதம் சிங்கள மொழியில் மாத்திரமே இசைக்கப்பட வேண்டும் என அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, தெரிவித்துள்ளார். அவர் தனது முகப்புத்தகத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

## பௌசி 'அவுட்'

கொழும்பு, நவ. 22

சிரேஷ்ட அரசியல்வாதியும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம்.பௌசி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம் அவரின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக வர முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார். (ஐ)




சிறந்த தொலைக்காட்சி புலனாய்வுத் தேடல் செய்தி அறிக்கையிடலுக்கான விருது டான் தொலைக்காட்சியின் தொகுப்பாளர் புலேந்திரன் சுலக்ஷனுக்கு நேற்று வழங்கப்பட்டது. நேற்று மாலை நடந்த அரச தொலைக்காட்சி விருது வழங்கும் விழாவில் இந்த விருதை சுலக்ஷன் பெற்றுக்கொண்டார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கும் விடு தலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல்களை சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான மோதல்களாக சித்திரிக்கப்பட்டமை பிழையான விடயம் என அவர் தெரிவித்திருக்கின்றார் (விரிவான செய்தி 14ஆம் பக்கத்தில்.)

அவருக்கு இரண்டு விடயங்களையெடுத்துச்சொல்வது பொருத்தமானது என்று நினைக்கின்றோம். கடந்த கால நிகழ்வுகள், சரித்திரங்கள் அவருக்குத் தெரியாமல் இருக்குமோ என்னவோ.

முதலாவது – அந்த யுத்தம், ஆயுதப் படைகள் – புலிகள் சண்டை, அப்படி சித்திரிக்கப்பட்டது அல்ல; உண்மையில் அப்படித்தான் உங்கள் சிங்கள அரசுகளால் முன்னெடுக்கப்பட்டது. தமிழர்கள் – சிங்களவர்கள் யுத்தமாகவே அது முன்னெடுக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டது.

யுத்தம் புரிந்த தரப்பு இலங்கை அரசுப்படை என்று கூறப்பட்டாலும், அது அப்போது முற்றும் முழுதாக சிங்களப் படைதான். யுத்தம் புரிந்த அரசுப் படைப் பட்டாளத்தில் 98 வீதமானோர் தமிழ் அல்லாதவர்களாகத்தான் இருந்தார்கள். அதனால்தான் அதனை சிங்களப் படை என்றோம். இன்னும் அந்த நிலைமையில் பெரிய மாற்றம் இல்லை.

யுத்தம் புரிந்த மறுதரப்பில் புலிகள். முற்றும் முழுதாக அது தமிழர் படைதான்.

அப்படி சிங்களவர் படை – தமிழர் படை என்று மோதல் நடந்தமையால்தான் அப்பாவித் தமிழர்கள் – யுத்தத்தில் சம்பந்தமே படாத பொதுமக்கள் – பல்லாயிரக் கணக்கில் கொன்றொழிக்கப்பட்டார்கள்.

உங்கள் சித்தப்பா – இன்று இந்த நாட்டின் அதிஉத்தம ஜனாதிபதியாக இருப்பவர் – இப்படி தமிழ் மக்களின் பேரழிவு மூலம் யுத்தத்தை நடத்தி முடித்து நாட்டை மீட்ட வீரபுருஷராக இருப்பது, தமிழ் – சிங்கள யுத்தமாக அதை நடத்தி முடித்தமையால்தான்.

அந்தப் போராட்டத்தை தமிழர் – சிங்களவர் போராட்டமாக நீங்கள் பார்த்திருக்காவிட்டால் –

அல்லது அது, புலிகள் – படைகள் போராட்டமே என்று உங்கள் அப்பாவும், உங்கள் சித்தப்பாவும், உங்கள் தரப்பில் ஏனையோரும் கருதிச் செயற்பட்டிருந்தால் –

அல்லது சுதந்திரத்துக்காகப் போராடும் புலிகள் வேறு, அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் வேறு என்று உங்கள் தரப்பினர் உண்மையில் பார்த்திருப்பார்களாயின் –

இன்று யுத்தக் குற்றங்களோ, பொறுப்புக் கூறலோ விவகாரமாக மாறும் சூழல் வந்திருக்காது. இந்தத் தீவில் தமிழர் தேசமும், சிங்களவர் தேசமும் இப்படிப் பிளவுண்ட மனநிலையில் நிற்கும் அவலம் நேர்ந்திருக்காது.

இதில் நாங்கள் மட்டும் குறைந்தவர்கள் அல்லர். அதை இப்போதும் மூடி ஒளித்துப் பேச விரும்பவில்லை.

'புலிகளே மக்கள், மக்களே புலிகள்' – என்றோம் நாங்கள். 'புலிகள் வேறு, மக்கள் வேறு' என்று நாம் செயற்பட்டோம் என்றும் நான் கூறவரவில்லை.

ஆக, நடந்து முடிந்த யுத்தம் 'அரசுப்படை – புலிகள் யுத்தம்' என்ற நிலைப்பாட்டையும் தாண்டி 'தமிழர் – சிங்களவர்' யுத்தமாகவே முன்னெடுக்கப்பட்டது. அது சித்திரிக்கப்பட்ட நிலைமை அல்ல. அதுதான் யதார்த்தம்.

நீங்கள் அந்த யுத்தத்தை, 2009 மேயுடன் கூட தமிழர் – சிங்களவர் யுத்தமாக மட்டுப்படுத்தி விட விரும்பவில்லை.

உங்களுடைய அரசியல் ஆதாயத்துக்காக நேற்று வரை – ஏன் இன்று வரை – அப்படித்தான் நீடித்து வருகின்றீர்கள்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களாகிய நாங்கள் மட்டுமல்லர், ஏனைய சிறுபான்மையினரும் – முஸ்லிம்களும், மலையகத் தமிழர்களும் கூட – ஒன்று திரண்டு யாருக்கு வாக்களித்தோம்? ஒரு சிங்களவருக்குத்தான். சஜித் பிரேமதாஸ என்ற பௌத்த, சிங்களவருக்குத்தான்.

எதிர்த்திசையில் இருந்த நீங்கள் என்ன கோஷத்தை முன்வைத்து இந்தப் பெருவெற்றியைத் தேடிக் கொண்டீர்கள் என்பதை மனதைத் தொட்டுச் சொல்லுங்கள்.

பௌத்த, சிங்களப் பேரினவாதமே உங்கள் வெற்றிக் கோஷமாக இருந்தது. ஆகவே – உணர்வைத் தட்டி எழுப்பும் அந்த இனவாதக் கோஷம் மட்டுமே – உங்களுக்கு இந்த ஜனாதிபதித் தேர்தலில் பெருவெற்றியைத் தேடித் தந்தது.

ஜனநாயக முறைமையில் உங்களுக்குக் கிடைத்த தோல்வியில் இருந்து மீள்வதற்கே தமிழ் – சிங்கள அல்லது பெரும்பான்மை இனத்தவர்கள் – சிறுபான்மையினர் என்ற உணர்ச்சி பூர்வமான விடயத்தைத் தட்டி எழுப்பி, பேரெழுச்சியாக்கி, அதில் அரசியல் குளிர்காயும் உங்கள் இனத்தின் பேரினவாதப் பண்பியல்பு, படைகள் – புலிகள் யுத்தத்தையும் சிங்களவர் – தமிழர், யுத்தமாகவே முன்னெடுத்தது. இல்லாத ஒன்றை அப்படிச் சித்திரித்தார்கள் என்று கற்பனை பண்ணாதீர்கள். அது அப்படித்தான் நடத்தப்பட்டது. அப்படி நடத்தப்பட்டது முழுத்தப்பு. அதற்காக அப்படி நடத்தப்படவில்லை என்றோ, தவறுதலாக அப்படி சித்திரிக்கப்படுகின்றது என்றோ அர்த்தம் பண்ணிக் கொள்ளாதீர்கள்.

மீண்டும் ஒரு விடயத்தை அழுத்தம் திருத்தமாகக் கூறி உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதை உங்கள் மனதில் அழுத்தமாகப் புதைத்துக் கொள்ளுங்கள்.

நடந்து முடிந்த அந்த யுத்தத்தை நீங்களும், உங்கள் குடும்பத்தவர்களும், அப்போதைய உங்கள் ஆட்சிப் பீடமும் தமிழர் – சிங்களவர் யுத்தமாக மட்டுமே பார்த்த படியால்தான் அந்த யுத்தத்தில் நேரடியாகச் சம்பந்தப்படாத பல்லாயிரம் அப்பாவித் தமிழ் உறவுகளை நாம் அநியாயமாக இழந்தோம். தமிழர், சிங்களவர் என்ற அடையாள நிலைமை தாண்டி, அந்த மக்களும் இந்த இலங்கைத் தீவின் சக – சகோதர – பிரஜைகள்தான் என்ற உண்மை உணர்வோடு உங்கள் தந்தையார் தலைமையிலான அதிகார பீடமும், அன்று உங்கள் சித்தப்பாவினால் வழி நடத்தப்பட்ட இலங்கைப் படைகளும் நோக்கியிருந்தால், பல்லாயிரம் சகோதரங்களின் அநியாயச் சாவை – அழிவை – பேரிழப்பை – நாம் சந்தித்திருக்க வேண்டி வந்திராது.

அந்தப் பேரினவாதப் பண்பியல்புகளில் இருந்து நீங்கள் மாறவில்லை என்பதைத்தான் நடந்து முடிந்த இந்தத் தேர்தலில் சிறுபான்மை, பெரும்பான்மை இனங்கள் துருவமயப்பட்டு நிற்கும் தேர்தல் முடிவுக்கு வழிசெய்த உங்கள் பிரசாரமும் காட்டி நிற்கின்றது.

இதை நீங்கள் புரிந்து கொண்டால், நடந்து முடிந்த யுத்தம் தமிழர் – சிங்களவர் யுத்தமாக சித்திரிக்கப்பட்டது என்ற கேள்வி உங்களிடம் இருந்து வந்திராது. அது சித்திரிக்கப்படவில்லை. அப்படித்தான் நடத்தி முடிக்கப்பட்டது.

★ ★ ★

சில ஊடகங்களில் ஒரு பண்பியல்பு இருக்கின்றது. தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் எனப் பிடிவாதம் பண்ணும் போக்கு.

ஒரு செய்தியைத் தெரிந்தோ, தெரியாமலோ தவறாகப் பிரசுரித்து விட்டால் – அல்லது வெளியிட்டு விட்டால் – அது பிழை எனத் தெரிந்த பின்னரும் மீண்டும் மீண்டும் பிழையைச் சரியாகக் காட்டுவது போல செய்தி வெளியிடுவதுதான் அது.

பிழையான செய்தி – தவறான தகவல் – பிரசுரித்து விட்டால். அது தவறு என்று தெரிந்தும் அதைத் திருத்த வேண்டும். அது முடியாவிட்டால் குறைந்த பட்சம், அது குறித்து அலட்டிக் கொள்ளாமல அமைதியாவது பேண வேண்டும். அதை விடுத்து பிரசுரித்த செய்தியை நியாயப்படுத்துவதற்காக மீண்டும் மீண்டும் பிழையைப் பிரசுரிக்கக் கூடாது.

பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமைதான் தமது பதவியை விட்டு விலகினார். நேற்று வியாழக்கிழமை அலரிமாளிகையில் அதன் ஆளணியினர் மத்தியில் பிரியாவிடை உரை நிகழ்த்திய பின்னர்தான் அலரிமாளிகையில் இருந்து அவர் புறப்பட்டார்.

அதுமட்டுமல்ல, தாம் நேற்று வியாழக்கிழமைதான் பிரதமர் பதவியிலிருந்து விலகுவார் என்றும், அது குறித்து நேற்று வியாழன் காலையில் புதிய ஜனாதிபதிக்கு அறிவிப்பார் என்றும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஓர் அறிக்கையைக் கூட தெட்டத் தெளிவாக அவர் வெளியிட்டிருந்தார்.

ஆனால், நேற்றுமுன்தினம் புதன்கிழமை வெளியான சில நாளிதழ்கள் அன்றையதினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகுவார் என்று செய்தி பிரசுரமாகியிருந்தது.

அந்தச் செய்தியை நியாயப்படுத்துவதற்காக நேற்றைய (வியாழக்கிழமை) பத்திரிகைகளில் 'ரணில் நேற்று பதவிவிலகல்' என்று தலைப்பிட்டு புதனன்றே ரணில் பதவி விலகிவிட்டார் என்றும் –

அலரிமாளிகையில் இருந்தும் (புதனன்றே) உடனடியாக வெளியேறி விட்டார் என்றும் –

கூட நேற்றுச் செய்தி வெளியிட்டன. சில இணையத் தளங்கள் பரபரப்புக்கு வெளியிட்ட செய்திகளை நம்பி – அல்லது அவற்றைச் சாதகமாகக் கருதி – இந்தச் செய்திகளை நாளிதழ்கள் இப்படி வெளியிட்டிருந்தன.

உண்மையில் 'காலைக்கதிர்' புதன்கிழமை பிரசுரத்தில் கூறிய படி நேற்று வியாழக்கிழமைதான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது பதவியிலிருந்து விலகினார். நேற்றுத்தான் அவர் அலரிமாளிகையில் இருந்தும் வெளியேறினார்.

சில நாளிதழ்கள் குறிப்பிட்டது போல ரணில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரதமர் பதவியிலிருந்து விலகினார் என்பது தவறு. அவர் அன்றைய தினம் அலரிமாளிகையிலிருந்து வெளியேறினார் என்பதும் தவறு.

கொழும்புச் செய்தி என்பதால் எப்படியும் எழுதலாம் என்ற விட்டேத்தித்தனம் ஒரு நாள் வினையை – விபரீதத்தை – வேண்டித்தந்து விடும்.

நான் உட்பட அனைத்து ஆசிரிய பீடத்தவர்களும் இத்தனைய விடயங்களில் எப்போதும் கொஞ்சமேனும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

–மின்னல்–

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் உடனடித் தேவை என்ன என்பது குறித்து நாங்கள் நிச்சயம் ஆராய்ந்து பார்ப்போம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் எமது தரப்பு வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றியீட்டியுள்ளார். இதுவொரு வரலாற்று ரீதியான வெற்றியாகும். ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் நிராகரித்துள்ளனர்.

ஆனால் வடக்கு –கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் அதிகளவு எமது வேட்பாளருக்கு வாக்களிக்கவில்லை. எனினும் வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் வலியை நாங்கள் புரிந்துகொள்கின்றோம்.

வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இழப்புக்களைச் சந்தித்தவர்கள். எனவே அவர்களுக்கு அந்த வலி இருக்கும். அதனால் தமிழ் மக்கள் தேர்தல்களில் தமது எதிர்ப்பை பதிவு செய்கின்றனர்.

உதாரணமாக எனது மகன் ஒரு தரப்பினரால் தண்டிக்கப்பட்டால் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாமல் போகும். எனது மகன் தவறு செய்திருந்தாலும் கூட என்னால் அவர் தண்டிக்கப்படுவதை தாங்கிக்கொள்ள முடியாது. அந்த தரப்பினர் பின்னர் என்னிடம் ஆதரவு கேட்டு வந்தால் என்னால் நான் ஆதரவு வழங்கமாட்டேன். அதன்போது என்னுடைய உணர்வு புரிந்து கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

அந்தவகையிலேயே தமிழ் மக்களின் உணர்வை நாங்கள் புரிந்து கொள்கின்றோம். எனவே புதிய அரசு என்ற வகையில் நாங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அவர்களின் தேவைகள் குறித்து ஆராயவேண்டியுள்ளது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிந்ததும் எமது அரசு வடக்கு – கிழக்கில் பாரிய அபிவிருத்திகளைச் செய்தது. எனினும் வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் இன்னும் குமுறலுடன் இருக்கின்றமையை புரிந்துகொள்கின்றோம். அதனால் எதிர்காலத்தில் அந்த மக்களின் பிரச்சினைகள் குறித்து விசேட அவதானம் செலுத்துவதுடன் அவற்றுக்கு தீர்வுவழங்குவது தொடர்பில் ஆராய்வோம் – என்றார். (ஜ)

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது இந்தியாவின் இந்த விருப்பத்தை ஜெய்சங்கர் அவரிடம் தெரிவித்தார் என இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் புதுடில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கண்ணியத்துடன் வாழக் கூடியதாக –அவர்களது வேணவாக்களை நிறைவேற்றக் கூடிய தீர்வொன்றைக் காண்பதற்கான தேசிய நல்லிணக்க செயன்முறைகளை இலங்கை அரசு முன்னெடுக்கும் என்ற இந்தியாவின் எதிர்பார்ப்பை இலங்கை ஜனாதிபதியிடம் ஜெய்சங்கர் தெரியப்படுத்தினார்.

இனத்துவ அடையாளப் பாகுபாடு இன்றிச் சகல இலங்கையர்களுக்குமான ஜனாதிபதியாகத் தான் இருப்போர் என்று கோட்டாபய ராஜபக்ஷ, ஜெய்ங்கரிடம் உறுதியளித்தார்.

இலங்கையின் புதிய அரசுடன் பணியாற்றுவதற்கு இந்தியா தயாராக இருக்கின்றது – என்றார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற அடுத்த நாள், மூன்று மணி நேர அவசர விஜயமாகத் திடீரென – திடுதிப்பென – கொழும்புக்கு வந்து இந்தத் தகவலை இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். (ஜ)

## எதிர்க்கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 47 பேர் கையொப்பமிட்டு சபாநாயகருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு சபாநாயகருக்குக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கலாக 47 பேர் சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு சபாநாயகரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

இந்த பின்னணியில் நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் சர்ச்சை எழலாமெனத் தெரிகிறது.

ஆனால் இதனை தீர்மானிப்பதில் ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன முக்கிய பங்கு வகிக்கலாமென ஒரு தரப்பு தெரிவித்தது.

ஆனாலும் பிரதான எதிர்க்கட்சியின் மட்டத்திலேயே இந்த விடயம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதால் ஐக்கிய தேசிய முன்னணி தவிர்ந்த பிற தரப்புகளின் கருத்தை சபாநாயகர் உள்வாங்க மாட்டார் என வேறு ஒரு தரப்பு தெரிவித்தது. (ஜ)

## போலிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மற்றும் முடிவுகள் எனக் கூறி பல தவறான செய்திகள் சமூக ஊடகங்களில் பரப்பப்படுவதாக ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் அனைத்து செய்திகளும், முடிவுகளும் ஜனாதிபதியின் அலுவலகம் அல்லது ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு மற்றும் தனது உத்தியோகபூர்வ சமூக ஊடகங்களில் மட்டும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (ஜ)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு ஆளுநர் பதவியைப் பெற, முன்னாள் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கடுமையான பிரயத்தனத்தில் ஈடுபட்டபோதும், அவரை ஆளுநராக நியமிப்பதில்லையென ஜனாதிபதி கோட்டாபய தீர்மானித்துள்ளார் என்றும் –

படைத்துறை சார்ந்தவர்களை ஆளுநர் பதவிக்கு நியமிக்கும் போது தேவையற்ற விமர்சனங்கள் ஏற்படுமென்பதால், அவரது பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது என்றும் – கூறப்படுகின்றது.

இதனால் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவைக் கிழக்கு ஆளுநராக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஜ)

# ஜனாதிபதியின் பதாதைகளை உடனே அகற்றும் பொலிஸ்!

கொழும்பு, நவ. 22

தனக்கு வாழ்த்துத் தெரிவித்து, நிறுவனங்கள், வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாகைகள், அறிவிப்புகள், கட் அவுட்களை உடனடியாக அகற்றுமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.



இதையடுத்து இவற்றை அகற்றும் நடவடிக்கைகளில் பொலிஸார் உடனடியாக ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தம்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பிரதமராகப் பதவியேற்றுக் கொண்ட மஹிந்த ராஜபக்ஷ, நேற்று பிற்பகல் பிரதமர் அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஜ)

## பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதானியாகக் காமினி செனரத் கடமையாற்றியிருந்தார்.

ஜனாதிபதியின் பணிக்குழாமின் பிரதானியாக காமினி செனரத் பணியாற்றியபோது லிப்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் நிதி மோசடிக் குற்றச்சாட்டு மைத்திரி – ரணில் அரசால் முன்வைக்கப்பட்டது. எனினும் அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் இடைக்கால அரசின் பிரதமரின் செயலாளராக காமினி செனரத் நியமிக்கப்பட்டுள்ளார். (ஜ)

## பி.பி.சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கை எடுக்கக் கோரி சுரகிமு ஸ்ரீலங்கா மற்றும் சிங்களே அபி அமைப்பு உள்ளிட்ட நான்கு அமைப்புக்கள் பிரிட்டன் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியுள்ளன.

அத்துடன் நேற்று கொழும்பு 7 பௌத்தாலோக மாவத்தையில் உள்ள பிரிட்டன் தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் பிரிட்டனைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் பி.பி.சி. செய்தி நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரிய கடிதம் பிரிட்டன் தூதரகத்தில் கையளிக்கப்பட்டது.

அந்த கடிதத்தில் –

இலங்கை ஆயுத படைகளுக்கும் புலிப் பயங்கரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழ் மக்கள் இன ஒழிப்புக்குக் கடந்த 17 ஆம் திகதி இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்புகூறக் கூடிய இராணுவத் தலைவர் என பி.பி.சி. செய்திச்சேவை விமர்சித்தமைக்கு நாங்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.

உண்மையில் இறுதி யுத்தத்தின்போது தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேறிய விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தித் தாக்கினார்கள்.

இதேபோல் இலங்கை ஆயுதப் படைகளின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் தவறான தகவல்களை பி.பி.சி. பல தடவைகள் வெளியிட்டு வந்துள்ளது.

இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையிலான இருதரப்பு நல்லுறவைப் பாதுகாக்கும் வகையில் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உங்களை வேண்டிக் கொள்கின்றோம் – என்றுள்ளது. (ஜ)

# அரச துறை நியமனங்களை இடைநிறுத்தியது திறைசேரி

கொழும்பு, நவ. 22

அரச திணைக்களங்களில் பணிநிலை வெற்றிடங்களை நிரப்பும் பணிகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்துமாறு திறைசேரியின் செயலாளர் சஜித் ஆட்டிக்கலவால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் நேற்றுப் பிற்பகல் சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட திணைக்களங்களின் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கும் அரசமைப்புப் பேரவைக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காரணமாக இடைநிறுத்தப்பட்ட அனைத்து நியமனங்களும் மீளவும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும்வரை இடைநிறுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலின் ஊடாகச் செயற்திட்ட உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட சுமார் 7 ஆயிரம் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஜ)

## அலரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாளிகையில் இருந்து வெளியேறினார்.

விசேட உரையொன்றை நேற்று முன்தினம் ஆற்றிய ரணில் விக்கிரமசிங்க, மக்கள் ஆணைப்படி தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு புதிய அரசை அமைக்க இடமளிக்கும் வகையில், தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்கிறார் என அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்றுக் காலை அவர் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பினார். அதையடுத்து, அலரி மாளிகையில் பணியாற்றும் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றினார். இதன் பின்னர் அங்கிருந்து ரணில் விக்கிரமசிங்க வெளியேறிச் சென்றார்.

பிரதமர் ரணில் அலரிமாளிகையை விட்டு நேற்று முன் ல்தினம் வெளியேறினார் என ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## எதிர்க்கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தீர்க்கப்படவேண்டிய உட்கட்சி விவகாரம் எனவும் இதனை நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பேச அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மையான உறுப்பினர்கள் உள்ள கட்சியில் நாடாளுமன்றக் குழுத் தலைவரே எதிர்க் கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளப்படுவார் எனவும் சபாநாயகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டம் நேற்றுக் காலை சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது.

அடுத்த நாடாளுமன்ற அமர்வுகளைக் கூட்டும் காலம், ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் ஆசன ஒதுக்கீடுகள் குறித்து இந்தக் கூட்டத்தில் அதிகமாகப் பேசப்பட்டது.

இந்தக் கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஸ்மன் கிரியெல்ல, டலஸ் அழகப்பெரும, ரவூப் ஹக்கீம், ரவி கருணாநாயக்க, தினேஷ் குணவர்த்தன, மஹிந்த அமரவீர, டக்ளஸ் தேவானந்தா, விமல் வீரவன்ஸ, நிமல் சிறிபால.டி.சில்வா, அமீர் அலி, அஜித்.பி.பேரேரா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்தே ரணில் விக்ரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்ட நிலையில் இருவரின் பெயர்களும் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த கூட்டத்தில் கருத்துக்களை முன்வைத்த சபாநயகர் கரு ஜயசூரிய, எதிர்க் கட்சித் தலைவர் யார் என்பது குறித்தும் யாரை தெரிவுசெய்ய வேண்டும் என்பது குறித்தும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பேசி அர்த்தமில்லை.

இந்த விடயமானது குழுவின் விடயப் பரப்புக்கு உட்பட்டதும் அல்ல. ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க் கட்சியாக நாடாளுமன்றத்தில் அமரவுள்ள நிலையில் யார் எதிர்க் கட்சித் தலைவர் என்பது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தீர்க்கப்பட வேண்டிய உட்கட்சி விவகாரம். இதனை நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பேச அவசியமில்லை – என்றார். (ஜ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ரணிலுக்கு எதிராகத் தொடரும் சதி

மழை விட்டும் இடி முழக்கம் ஓயவில்லை என்ற நிலைமை ஐக்கிய தேசியக் கட்சிக்குள்.

நாடாளுமன்றப் பெரும்பான்மையை வைத்திருந்தும் கூட பிரதமராக நீடிக்க முடியாத அவல நிலைமை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு.

கட்சியின் தலைவரான அவரை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விடாமல் ஓரங்கட்டுவதில் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் குழு வெற்றி கண்டது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஐக்கிய தேசிய முன்னனி அரசை அமைத்த கூட்டுக் கட்சிகளின் தலைவர்களும் சேர்ந்து ரணில் விக்கிரமசிங்கவின் காலை வாருகின்றார்கள்.

அதனால், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு ரணிலிடம் இருந்து பறிபோனது. சஜித் அதனைப் பறித்து எடுத்துக் கொண்டார்.

இந்த அரசியல் அதிரடியில் சதியில் சில ஊடக மாபியாக்களும் கூட பின்னணியில் சம்பந்தப்பட்டிருந்தன.

தமது எழுபதுகளைத் தாண்டியிருக்கும் ரணில் விக்கிரமசிங்க கடைசியாகக் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பாக இருந்த ஜனாதிபதித் தேர்தல் இதுதான்.

கால் நூற்றாண்டுகளுக்கு மேல் பெரும் அரசியல் சூறாவளிகள், நெருக்கடிகள், யுத்தப் பேரழிவுச் சிக்கல்கள் ஆகியவற்றுக்கும் மத்தியிலும் கட்சியை அழிய விடாது கொண்டு நடத்தி, வழிகாட்டிய –

தன்னுடைய காலத்தில் தான் எதிர்கொண்ட ஆறு ஜனாதிபதித் தேர்தல்களில் தான் போட்டியிடும் வாய்ப்புகள் இருந்த போதும், இரண்டில் மட்டும் போட்டியிட்டு விட்டு, மற்றைய தேர்தல்களை கட்சியினதும், நாட்டினதும் நலன்கருதி, பொதுவேட்பாளர்கள் மற்றும் கட்சியின் பிற வேட்பாளர்களிடம் விட்டுக் கொடுத்து ஒதுங்கிய –

ரணில் விக்கிரசிங்கவை கட்சியின் தலைமைப் பதவியிலும் இனி இருக்க – நீடிக்க – விடுவதில்லை என்று கட்சிக்குள்ளேயே வலிமையான தரப்பினர் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றனர் என்று தெரிகின்றது.

கடந்த, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை சஜித் பிரேமதாஸவுக்கு ரணில் விட்டுக் கொடுத்தபோது அவரே 2024 வரை கட்சித் தலைவராக நீடிப்பார் என்று உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் அந்த உறுதி மொழியை வழங்கிய தரப்புகள் இப்போது அதனைக் காற்றில் பறக்க விட்டபடி ரணிலை நிரந்தரமாக அரசியலில் இருந்து ஒதுக்கி வீட்டுக்கு அனுப்பத் திட்டமிட்டுச் செயற்படத் தொடங்கியிருக்கின்றன எனத் தெரிகின்றது.

சேர்ந்து அரசு அமைத்த பங்காளித் தலைவர்கள் ஒவ்வொருவராக அமைச்சர் பதவியைத் துறந்து காலை வாரியமையால் வேறு வழியின்றி பிரதமர் பதவியைத் துறந்து தமது அரசை முடிவுறுத்த வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார் ரணில்.

அதன் பின்னர் அவரை எதிர்க் கட்சித் தலைவர் பதவியிலும் நீடிக்க விடுவதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றது சஜித் குழு.

ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், எம்.பிக்கள் சிலரும் இப்படி ரணிலின் காலை வாரும் கைங்காரியத்திலும் பங்காளிகளாக நிற்கின்றனர் என்றும் தகவல்.

பிரதமர் பதவியை ரணில் துறந்தமையை அடுத்து, அவரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கும்படி பரிந்துரைக்கும் கடிதத்தை கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் சபாநாயகருக்கு அனுப்பியுள்ளார்.

ஆனால், கட்சியின் 47 எம்.பிக்கள் ஒப்பமிட்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கும்படி சபாநாயகருக்கு ஒரு கடிதம் தனியாக எழுதியிருக்கின்றார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால், கட்சியின் தலைவராக ரணில் நீடிக்கும் வரை கட்சி யாப்பின்படி அவரே கட்சியின் நாடாளுமன்றம் குழுத் தலைவராவார். அப்படி நாடாளுமன்றக் குழுத் தலைவராக அவர் இருக்கும் அணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படுமானால் அது நாடாளுமன்றக் குழுத் தலைவரான ரணிலுக்கே உரியதாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க நீடிக்கும் வரை அவரிடமிருந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித் பிரேமதாஸ பிடுங்குவது கஷ்டமான காரியமாகத்தான் இருக்கும்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும், கட்சித் தலைவர் பதவியையும் ரணில் துறந்து விட்டு, அவற்றை சஜித்துக்கு அளிக்க வேண்டும் எனவும், இல்லையேல் சஜித் பிரேமதாஸ தனிக்கட்சி தொடங்குவார் என்றும் அவரது அணி எம்.பி. ஒருவர் எச்சரித்திருக்கின்றார்.

அவருக்கு ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தனிக்கட்சி தொடங்கி சாதனை படைப்பதற்கு எல்லோரும் ராஜபக்ஷக்களாகி விட முடியாது.

சில சமயங்களில் அது 'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவான கதையாகி விடும்' என்பதைக் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராய விசேட ஆணைக்குழு வேண்டும்!

## நிமல் லான்சா ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம்

கொழும்பு, நவ. 22

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராய முழு நீதிமன்ற அதிகாரத்துடன் கூடிய விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் –

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாகத் தற்போதும் பாதிக்கப்பட்டவர்களிடம் கடும் சந்தேகம் மற்றும் தெளிவற்ற நிலை காணப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதியிடமும் மற்றும் முன் னாள் பிரதமருடனும் இந்தத் தாக்குதல் தொடர் பாக முழு நீதிமன்ற அதிகாரம் கொண்ட விசேட ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு கோரியிருந்தார். எனினும் அதற்கு உரிய பதில் கிடைக்வில்லை.

அது தொடர்பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற விசேட தேர்வுக் குழு தொடர்பாக பேராயர் கர்தினால்கூட திருப்தி அடையவில்லை.

அதன்படி, எந்த ஓர் அரசியல் கட்சிக்கும் சார்பற்ற சுயாதீன, நம்பிக்கையுடைய மற்றும் அது தொடர்பாக அனுபவம் நிறைந்த சுயாதீன நபர்களை கொண்ட முழு நீதிமன்ற அதிகாரத்துடன் கூடிய விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் – என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஹெரோய்னுடன் ஒருவர் வவுனியாவில் சிக்கினார்!



வவுனியா, நவ. 22


வவுனியாவில் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப் பொருளுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வவுனியா பிடியாணைப் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி. திஸ்ஸ லால்த சில்வாவின் உத்தரவுக்கமைவாக வவுனியா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி என்.வெலிகல தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் தேக்கவத்தைப் பகுதியை சேர்ந்த 21 வயதுடைய நபர் ஒருவரை ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து ஒரு கிராம் 970 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ – 100)

# பாணின் விலை 5 ரூபா குறைப்பு

## வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவிப்பு




கொழும்பு, நவ. 22

450 கிராம் நிறையிடைய பாண் ஒன்றின் விலை 5 ரூபாவால் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் மீளக் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை கிலோவுக்கு 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பாணின் விலை நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு முதல் 5 ரூபாவால் அதிகரிக்கப்படுவதாக சங்கம் அறிவித்தது.

இதன்படி 450 கிராம் பாண் ஒன்று 70 ரூபாவாக நேற்றுக் காலை விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் 450 கிராம் நிறையிடைய பாண் ஒன்றின் விலை 5 ரூபாவால் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் மீளக் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் நேற்றுக் காலை அறிவித்துள்ளது. (ஐ)

# விபத்தில் ஒருவர் படுகாயம்



யாழ்ப்பாணம் – ஊர்காவற்றுறை பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை பிரதான வீதியில்மோட்டார்சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற ஓட்டோவுடன் மோதிவிபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி சென்றவர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ)




**நாளை**

22.11.2019
சனிகிழமை

நட்சத்திரம்: அத்தம் பி.ப 1.59 வரை
திதி : துவாதசி பி.இ 2.40 வரை
இராகுகாலம் : 9.11 – 10.41
சுப நேரம் : 3.11 – 4.41



# சஜித்துக்கு அமோக வரவேற்பு!

கொழும்பு, நவ. 22

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கட்சியின் அமைப்பாளர்கள் மற்றும் ஆதாரவாளர்களுடன் சந்திப்பில் ஈடுபட்டுள்ளார்.

அரசியலிருந்து ஒதுங்கி இருப்பதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்த நிலையில் அரசியலில் இருக்கவேண்டும் என வலியுறுத்தி ஆதரவாளர்கள் ஒன்றுகூடி அவரை நேற்று வரவேற்றனர்.

கொழும்பில் வக்சோல் வீதியில் உள்ள அவரது அலுவலகத்துக்கு நேற்று முற்பகல் வருகை தந்த சஜித் பிரேமதாஸவை ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சூழ்ந்து வரவேற்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்படவேண்டும் எனக் கட்சியின் கீழ் மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை வலியுறுத்தப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆள்கடத்தல்கள் இனி நடக்காது!

## புதிய பாதுகாப்புச் செயலர் உறுதி



கொழும்பு, நவ. 22

நாட்டில் தேவையற்ற குழப்பங்களோ, அரசியல் பழிவாங்கல்களோ, ஆள்கடத்தல்களோ இடம்பெறலாம் என எவரும் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று புதிய பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் பதவியேற்றுக் கொண்ட அவர், விசேட அறிக்கையொன்றை வெளியிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்துடன் அரசியல் பழிவாங்கல்கள், ஆள்கடத்தல்கள் மற்றும் தேவையற்ற குழப்பங்கள் இடம்பெறலாம் என நாட்டு மக்கள் வீணாக அச்சம் கொள்ளத்தேவையில்லை. எதிர்வரும் நாள்களில் நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் ஏனைய நாள்களை விட அதிக கவனம் செலுத்தப்படும்.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறும், ஒவ்வொரு பிரதேசங்களினதும் பாதுகாப்புக்கு அந்தந்தப் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் உயரதிகாரிகள் பொறுப்பாகச் செயற்படவேண்டும் எனவும் பொலிஸ் மாஅதிபர் ஊடாக உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் குறிக்கோளுக்கு அமைய இன, மத மற்றும் கட்சி பேதமின்றிச் சகலரும் அமைதியாக வாழக்கூடிய சூழலை பேணுவதற்குச் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தேவையற்ற அச்சம் கொள்ளாது சுமுகமாக அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். யாராவது அல்லது எந்தக் குழுக்களாவது அமைதியைக் குழப்பும் வகையில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகத் தராதரம் பாராது நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு தரப்புக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது – என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நிதி மோசடிக் குற்றச்சாட்டு வழக்கிலிருந்து கோட்டாவை விடுவித்தது சிறப்பு நீதிமன்று



கொழும்பு, நவ. 22

டி.ஏ. ராஜபக்ஷ நினைவுச் சின்னம் அமைப்பதில் மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டிலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விடுவித்து நிரந்தர நீதாய மேல்நீதிமன்றம் உத்தரவிட்டது.

தங்காலையில் டி.ஏ. ராஜபக்ஷ நினைவுச் சின்னம் அமைப்பதில் 4 கோடி ரூபா அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்ட குற்றச்சாட்டில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக, நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்று வந்தது.

இதனால் கோட்டாபய ராஜபக்ஷவின் கடவுச்சீட்டு நிரந்தர நீதாய நீதிமன்றால் தடுத்து வைக்கப்பட்டதுடன் அவரது வெளிநாட்டுப் பயணத்துக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெற்று நாட்டின் 7ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றுள்ளார்.

இந்த நிலையில் அரசமைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு ஜனாதிபதியின் சிறப்புரிமைக்கு அமைய டி.ஏ. ராஜபக்ஷ நினைவுச் சின்னம் அமைப்பதில் அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்ட வழக்கிலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுவிக்கவேண்டும் என்று சட்டமா அதிபரால் மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் கோட்டாபய ராஜபக்ஷவை விடுவித்து நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கடவுச்சீட்டு மேல் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.22

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில்**

பாலாவோடை இணுவில், டச்சு வீதி சங்குவேலி, ஆர்க் வீதி உடுவில், உடுவில் மகளிர கல்லூரி பிரதேசம், கரணவாய, இலகாமம, நாவலர்மடம், நெல்லியடி, கொடிகாமம் வீதி, சாமியன் அரசடி, விக்னேஸ்வரா, சம்மந்தரக் டை, கிழவிதோட்டம், காளிகோவிலடி, யாக்கரு, கலிகை, அரசடி, வலிக்கந்தோட்டம, துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திரம்மன் கோவிலடி, காளிகோவிலடி, வதிரி, இரும்புமதவடி, சக்களாவத்தை, தேவரையாழி, மனோகரா, திக்கம், திக்கம் சித்திவிநாயகர், முடக்காடு, பொற்பதி, கோண்டாவில் வோட்டர் வோக்ஸ், கோணட்ாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலைய பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராச வீதி லைடன் பாம் பிரதேசம், கிருஸ்ணன் கோவில் சந்தி பிரதேசம், திருநெல்வேலி ஒரு பகுதி, இராணுவ முகாம், கோப்பாய் கல்வியியற் கல்லூரி, யாழ் பல்கலைக்கழக தங்கு விடுதி, இரரேஜஸ்வரி திருமண மண்டபம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில் -**

ஈரப்பொயகுளம், செட்டிக்குளம் நகர பிரதேசத்தின் ஒரு பகுதியிலும் –

**மன்னார் பிரதேசத்தில்-**

பரப்பாங்கண்டல், மாதோட்டம, மணல்குளம், இலந்தைமோட்டை, சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும், – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# 6 மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள்



கொழும்பு, நவ. 22

6 மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முன்பாக அவர்கள் நேற்று வியாழக்கிழமை பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

6 மாகாணங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர்கள் விவரம் வருமாறு: –

மேல் மாகாணம் – டொக்டர் சீதா அரபேபொல
மத்திய மாகாணம் – லலித் யு கமகே
ஊவா மாகாணம் – ராஜா கொல்லூரே
தென் மாகாணம் – டொக்டர் வில்லி கமகே
வடமேல் மாகாண – ஏ.ஜே.எம் முஸம்மில்
சப்ரகமுவ மாகாணம் – டிகிரி கொப்பேகடுவ

இதேவேளை, வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கான ஆளுநர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

# மகாராஷ்டிரத்தில் பா.ஜ.கவைக் கைவிட்டு சிவசேனா காங்கிரஸ் தரப்புகளுடன் சேர்ந்து அரசு அமைக்கிறது

## தேர்தலின் பின்னரான அரசியல் இழுபறி முடிவுக்கு வருகின்றது



புதுடெல்லி,நவ.22

மராட்டியத்தில் அரசியல் இழுபறி முடிவுக்கு வருகிறது.

அங்கு நடந்த சட்டசபைத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி – சிவசேனா கூட்டணி பெரு வெற்றி ஈட்டி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்ற போதும், இரு தரப்புகளுக்கும் இடையில் ஆட்சியைப் பங்கு போடுவதில் இழுபறி ஏற்பட்டமையினால் அரசு அமைக்க முடியாமல் போயிற்று. அங்கு ஆளுநர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் எதிரணியில் இருந்த தேசியவாத காங்கிரஸ் – காங்கிரஸ் கட்சிகளுடன் சேர்ந்து சிவசேனா அங்கு ஆட்சி அமைக்கும் எனத் தற்போது அறிவிக்கப்படுகிறது.

தேசியவாத காங்கிரஸ் – காங்கிரஸ் தலைவர்கள் நேற்று சந்திக்க இருந்தனர். இன்று 22 ஆம் திகதி அரசு அமைப்பது குறித்த அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

மராட்டிய சட்டசபை தேர்தலில் பாரதீய ஜனதா, சிவசேனா கூட்டணி கட்சிகள் வெற்றி பெற்றன. ஆனால் முதலமைச்சர் பதவியில் சிவசேனா பங்கு கேட்டதாலும், அதற்கு பாரதீய ஜனதா மறுத்ததாலும் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைத் தொடர்ந்து, எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாததால், கடந்த 12 ஆம் திகதி மராட்டியத்தில் ஜனாதிபதி ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

பாரதீய ஜனதாவுடன் மோதலைத் தொடர்ந்து காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸுடன் இணைந்து ஆட்சி அமைக்க சிவசேனா முயற்சி செய்தது. ஜனாதிபதி ஆட்சி வந்த பிறகு அந்த முயற்சியில் சிவசேனா தீவிரம் காட்டியது.

இந்துத்வா கொள்கை கொண்ட சிவசேனாவுடன் கைகோர்க்க முதலில் தயங்கிய காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகள், பின்னர் ஆட்சி அமைக்க சம்மதித்தன. இதற்காக மூன்று கட்சி தலைவர்களும் நேரில் சந்தித்து பேசி கூட்டணி அரசில் செயல்படுத்த வேண்டிய குறைந்தபட்ச செயல் திட்டத்தை வகுத்தனர். அது இறுதிக் கட்டத்தை நெருங்கி விட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் டெல்லியில் ஒரு பேட்டியின் போது தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவாரின் மழுப்பலான பதிலால் மராட்டியத்தில் ஆட்சி அமைப்பதில் மீண்டும் சிக்கல் ஏற்பட்டதாக கூறப்பட்டது.

இந்த நிலையில் பிரதமர் நரேந்திர மோடியை தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார், நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் மதியம் சந்தித்துப் பேசினார். அப்போது மராட்டிய விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பாக இரு தலைவர்களும் முக்கிய ஆலோசனை மேற்கொண்டனர்.

முன்னதாக காங்கிரஸ் தலைமையகத்தில் கட்சித் தலைவர்கள் கே.சி.வேணுகோபால், மல்லிகார் ஜுன் கார்கே ஆகியோரை மராட்டிய காங்கிரஸ் தலைவர்கள் சந்தித்து பேசினார். கூட்டத்தில் பாலாசா கேப் தோரத், பிருத்விராஜ் சவான், நசீம் கான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டெல்லியில் உள்ள தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாரின் இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை காங்கிரஸ் தலைவர்கள் ஆலோசனை நடத்தினர். காங்கிரஸுக்கும் தேசியவாத காங் கிரஸுக்கும் இடையே நேற்று நடந்த ஆலோசனை கூட்டத்தில் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சிவசேனா அடங்கிய கூட்டணி அடுத்த வாரத்திற்குள் மராட்டியத்தில் அரசு அமைக்கும் வாய்ப்பு உருவாகி உள்ளது.

இந்தச்சந்திப்புக்கு பிறகு காங்கிரஸும் – தேசிய வாத காங்கிரஸும் கூட்டாகச் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தன.

அப்போது காங்கிரஸும் தேசியவாத காங்கிரஸும் ஒரு நிலையான அரசாங்கத்தை அமைத்து மாநிலத்தில் அரசியல் நிச்சயமற்ற தன்மையை முடிவுக்குக் கொண்டுவரும் என அறிவித்தன.

முன்னதாக, தேசியவாத காங்கிரஸ் நவாப் மாலிக் மற்றும் பிருத்விராஜ் சவான் ஆகியோர் நிருபர்கள் கூட்டத்தில் அரசு அமைப்பதற்கு மூன்று கட்சிகளும் கைகோர்க்க வேண்டியிருக்கும் என்று கூறியபோதும் சிவ சேனா பெயரை குறிப்பிடவில்லை. காங்கிரஸும் – தேசியவாத காங்கிரஸும் ஒரு நிலையான அரசை வழங்கும் என்று கூறினர். நேற்று இரவு பேட்டியின் போதே சிவ சேனாவின் பெயரைக் குறிப்பிட்டு பேசினர். இது, பிரச்சினை முடிவுக்கு வந்து விட்டது என்பதைக் காட்டுகிறது.

நள்ளிரவில் மற்றொரு சுற்று ஆலோசனை கூட்டம் நடந்தது. அதன் பின்னர் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் முதல்வருமான பிருத்விராஜ் சவான் கூறும் போது ஆலோசனை கூட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். நாளை(இன்று)மீண்டும் சந்திப்போம், பின்னர் வெள்ளிக்கிழமை சிவசேனாவுடன் ஆலோசனை நடத்த மும்பைக்கு செல்கிறோம். அன்று மாலை முக்கிய அறிவிப்பு வெளியிடப்படும் என எதிர்பார்க்கிறோம் என கூறினார்.

இது தொடர்பாக மூன்று கட்சிகளும் இன்று நவம்பர் 22 வெள்ளிக்கிழமை கூட்டுச் செய்தியாளர் கூட்டத்தில் முறையான அறிவிப்பை வெளியிட வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் நேற்று மீண்டும் கூடி மராட்டியத்தில் அரசு உருவாக்குவது தொடர்பான ஒப்பந்தம் தொடர்பாக கடைசி நிமிட ஆலோசனை நடத்தவிருந்தனர்.

அடுத்த இரண்டு நாள்களில் தேசியவாத காங்கிரஸ் – காங்கிரஸ் மற்றும் சிவ சேனா இடையே பிரிக்கப்பட வேண்டிய முக்கிய இலாகாக்கள் குறித்து முடிவு செய்யப்படும்.

மராட்டிய முதல்வர் ஆகும் முதல் வாய்ப்பு தேசியவாத காங்கிரஸுக்கு கிடைக்கும் என்றும், தேசியவாத காங்கிரஸ் தலைவரான சரத்பவார் அல்லது அவரது மகள் சுப்ரியா சூலே, காங்கிரஸ் – தேசியவாத காங்கிரஸ் – சிவசேனா கூட்டணியின் முதல்வராக வருவார் என்றும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சபரிமலைக் கோயிலை நிர்வகிப்பதற்கு தனிச் சட்டம் உருவாக்கக் கோரிக்கை



சபரிமலை ஐயப்பன் கோயிலை நிர்வகிக்கத் தனிச் சட்டம் உருவாக்கும்படி கேரள அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

சபரிமலை கோயில் நிர்வாகப் பிரச்சினை தொடர்பாக பந்தளம் ராஜ குடும்பத்தினர் தொடுத்த வழக்கு மீது நேற்று முன்தினம் உச்சநீதிமன்றம் விசாரணை நடத்தியது. அப்போது ஐயப்ப பக்தர்களின் நலன்கள் தொடர்பான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி, சபரி மலை கோயில் நிர்வாகம் தொடர்பாகத் தனிச் சட்டம் உருவாக்கும்படியும், அது தொடர்பான விரிவான அறிக்கையை ஜனவரி 3ஆவது வாரத்தில் தாக்கல் செய்யும்படியும் கேரள அரசை உச்ச நீதிமன்றம் கேட்டுக் கொண்டது.

கேரள அரசுத் தரப்பில் கோயில்கள், அதன் நிர்வாகம் தொடர்பான சட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

# கல்கி சாமியார் ஆசிரமத்தில் மீண்டும் வருமான வரித்துறையினர் சோதனை



ஆந்திராவில் உள்ள கல்கி சாமியார் ஆசிரமத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் மீண்டும் சோதனை நடத்தி வருகின்றனர்.

சித்தூர் மாவட்டம், வரதய்யபாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படக்கூடிய கல்கி ஆசிரமத்தில் கடந்த மாதம் ஆசிரமத்திற்கு சொந்தமான அலுவலகத்தில் 40 இடங்களில் வருமான வரித்துறையினர் அதிரடியாகச் சோதனை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனையில் 94 கோடி ரூபா ரொக்கம், 24 கோடி ரூபா வெளிநாட்டு பணம் மற்றும் 20 கோடி ரூபா மதிப்புள்ள தங்க, வைர ஆபரணங்களை அதிகாரிகள் கைப்பற்றினர்.

இந்தநிலையில் புதன் மாலை மீண்டும் வருமான வரித்துறையினர் நான்கு குழுக்களாக பிரிந்து கல்கி ஆசிரமத்தில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# நூறு கோடி டொலர் மதிப்பு ஆயுதங்கள் இந்தியாவுக்கு விற்கின்றது அமெரிக்கா





வொஷிங்டன்,நவ.22

இந்தியாவிற்கு நூறு கோடி டொலர் மதிப்புள்ள 13 கடற்படை சுடுகலன்கள் உள்ளிட்ட ஆயுதங்களை விற்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி அமெரிக்க அரசாங்கம் இந்தியாவிற்கு 13 எம்.கே.45 ரக கடற்படை சுடுகலன்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை விற்பனை செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

இவற்றின் மொத்த மதிப்பு சுமார் ஒரு பில்லியன் (நூறு கோடி) அமெரிக்க டொலர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயுதங்கள், உதிரிபாகங்கள், அவற்றை கையாள்வதற்கான பயிற்சி, தொழில்நுட்ப விவரங்கள் மற்றும் போக்குவரத்து செலவுகள் ஆகியவை இதில் அடங்கும்.

இந்த ராணுவ வியாபாரம் மூலம் தங்கள் நாட்டின் வெளியுறவுக் கொள்கை மற்றும் தேசியப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என அமெரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தியா நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் தனது எதிரிகளைத் திறன்பட எதிர்கொள்ள இந்த ஆயுதங்கள் உதவியாக அமையும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikathir



போராட்டங்களில் தொடரும் வன்முறைகளை அடுத்து

# ஹொங்கொங்கிற்கு எதிராக அமெ. பொருளாதாரத் தடை



வொஷிங்டன்,நவ.22

ஹொங்கொங் போராட்டங்களில் தொடர் வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வரும் நிலையில், இந்த விவகாரத்தில் ஹொங்கொங் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்ட மசோதாவை நிறைவேற்றி உள்ளது.

இங்கிலாந்தின் கொலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்த ஹாங்காங் 1997 ஆம் ஆண்டு, ஜூலை முதலாம் திகதி, சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒரே நாடு, இரண்டு அமைப்புகள் என்ற வகையில் சீனாவின் நேரடி கட்டுப்பாட்டில் ஹொங்கொங் உள்ளது.

ஆனால் சீனாவில் உள்ள சுதந்திரம், ஹொங்கொங்கில் கிடையாது. கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட சுதந்திரத்தைத்தான் ஹொங்கொங. மக்கள் அனுபவிக்கின்றனர். அதுமட்டுமின்றி, நீதித்துறை சுதந்திரத்திலும் சீனாவின் தலையீடு இருக்கிறது.

இந்த நிலையில் கடந்த மே மாதம், கிரிமினல் கைதிகளை சீனாவுக்கு நாடு கடத்தி, அங்கு வழக்கு விசாரணையை எதிர்கொள்ள வைக்கும் வகையில் ஒரு சட்ட திருத்தம் செய்வதற்கு முடிவு செய்து, அதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

இந்தப் பிரேரணை ஹொங்கொங் மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி பெரும் போராட்டங்களுக்கு வழிவகுத்தது. ஜனநாயக ஆர்வலர்களின் போராட்டத்துக்கு அடிபணிந்த அரசு சர்ச்சைக்குரிய பிரேரணை திரும்பப்பெற்றது. ஆனாலும் போராட்டம் ஓயவில்லை.

சீனாவிடம் இருந்து கூடுதல் ஜனநாயக உரிமைகள், ஹொங்கொங்கில் குற்ற வழக்குகளில் சிக்குபவர்கள் மீது வெளிப்படையான விசாரணை உள்ளிட்ட 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனநாயக ஆர்வலர்கள் போராட்டத்தை விரிவுபடுத்தி உள்ளனர்.

தொடர்ந்து 6 மாதங்களாக நடந்து வரும் இந்த போராட்டத்தில் வன்முறை தாண்டவமாடி வருகிறது. அதிலும் குறிப்பாக கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாக வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இந்தப் போராட்டம் தொடங்கிய நாள் முதலே அமெரிக்கா, ஹொங்கொங் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பி வருகிறது. போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவதாக சீனா மற்றும் ஹொங்கொங் அரசை அமெரிக்கா ஏற்கனவே கண்டித்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட் சபையில் ஹொங்கொங் போராட்டம் தொடர்பாக 2 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன.

இதில் முதல் தீர்மானம் ஹொங்கொங் மீது தூதரக ரீதியில் நடவடிக்கை எடுக்கவும், பொருளாதார தடைகளை விதிக்கவும் வழிவகுக்கும்.

அதே போல் ஹொங்கொங் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் 2019 என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டுள்ள மற்றொரு தீர்மானம் ஹொங்கொங் பொலிஸ் படையினருக்கு அமெரிக்க நிறுவனங்கள் சில ஆயுதங்களை வணிக ரீதியாக ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்யும்.

அத்துடன் இந்தத் தீர்மானம் ஹொங்கொங்கில் மனித உரிமை மீறல்களுக்குக் காரணமான அதிகாரிகளுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்கும்.

இதற்கிடையே ஹொங்கொங் விவகாரம் தொடர்பாக அமெரிக்க செனட் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டமைக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சீனாவுக்கான அமெரிக்கா தூதருக்கு சீன வெளியுறவு அமைச்சகம் அழைப்பாணை அனுப்பி உள்ளது.

# கர்ப்பிணியைக் கடித்துக் குதறி கொன்ற வேட்டை நாய்கள்



பாரீஸ்,நவ.22

பிரான்ஸில் கர்ப்பிணி ஒருவரை வேட்டை நாய்கள் கடித்துக்கொன்ற பரிதாப சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பிரான்ஸ் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள வில்லர் கோட்டேரெட்ஸ் நகரை சேர்ந்த 29 வயதான கர்ப்பிணி, அங்குள்ள வனப்பகுதியில் நடைபயிற்சிக்கு சென்றார். அவர் செல்லப் பிராணிகளாக வளர்த்து வந்த 5 நாய்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றார்.

அப்போது வேட்டைக்காரர்கள் மான்களை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்தும் வேட்டை நாய்கள் அந்தக் கர்ப்பிணியைச் சூழ்ந்து கொண்டு அவரைப் பயமுறுத்தின. இதையடுத்து, அவர் தனது கணவரை செல்போனில் தொடர்பு கொண்டு தான் வேட்டை நாய்களிடம் மாட்டிக் கொண்டார் எனக் கூறினார்.

அதன் பேரில் அவரது கணவர் உடனடியாக அங்கு விரைந்து சென்றார். ஆனால் அதற்குள் வேட்டை நாய்கள் அந்தப் பெண்ணை கடித்துக் குதறிக் கொன்று விட்டன. அந்த பெண்ணின் வளர்ப்பு நாய்கள் அவரது உடலின் அருகே அமர்ந்து கொண்டு அழுது கொண்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் கொலை வழக்கு பதிவு செய்து, விசாரணையை தொடங்கிஉள்ளனர்.

கர்ப்பிணியைக் கடித்துக் கொன்ற நாய்களைக் கண்டறிவதற்காக இதுவரை 93 நாய்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளன. அவற்றில் அந்த பெண்ணின் வளர்ப்பு நாய்களும் அடங்கும்.

# ஜேர்மனியில் முன்னாள் அதிபரின் கத்தியால் மகன் குத்திக் கொலை




பேர்லின்,நவ.22

ஜேர்மனியின் முன்னாள் அதிபர் ரிச்சார்ட் வான் வெய்ஸ் சாக்கரின் (Richard von Weizsaecker) மகன் குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கின்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு ஜேர்மனியின் அதிபராக 1984 ஆம் ஆண்டும், ஒருங்கிணைந்த ஜேர்மனியின் அதிபராக 1994 வரையும் பதவி வகித்தவர் வான் வெய்ஸ்சாக்கர்.

பேர்லினிலுள்ள தனியார் மருத்துவமனையில் தலைமை மருத்துவராக இருந்த அவரது மகன் பிரிட்ஸ், நிகழ்ச்சி ஒன்றில் பேசிக்கொண்டிருந்த போது, கூட்டத்தில் அமர்ந்திருந்த நபர் திடீரென முன்னோக்கி வந்து கத்தியால் குத்தினார். இதில் பலத்த காயமடைந்த பிரிட்ஸ் உயிரிழந்தார்.

பிரிட்ஸை காப்பாற்ற முயன்ற பொலிஸ்காரர் ஒருவரும் கத்தி குத்துக்கு ஆளான நிலையில் தப்பி ஓட முயன்ற அந்த நபர் கைது செய்யப்பட்டார்.

# நியூஸிலாந்தில் ஆலங்கட்டி மழை பொதுமக்களுக்குப் பெரும் சிரமம்

நியூஸிலாந்து, நவ.22

நியூஸிலாந்தில் தற்போது பெய்து வரும் ஆலங்கட்டி மழையால் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

குறிப்பாக டைமரு, ஓமரூ பகுதிகளில் பெய்து வரும் ஆலங்கட்டி மழைத் துளி ஒவ்வொன்றும் கோல்ஃப் பந்து அளவிற்கு இருப்பதால் அவை வீட்டின் ஜன்னல், கண்ணாடி மற்றும் மேற்கூரையை சேதப்படுத்துகின்றன என வீட்டின் உரிமையாளர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று, Selwyn, Ashburton ஆகிய பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய ஆலங்கட்டி மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச் சரித்துள்ளது.



# கண்ணாடி போத்தல்களைக் கொண்டு தனது வீட்டைக் கட்டிய பிரேசில் பெண்



பிரேசிலில் பெண் ஒருவர் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போத்தல்களைக் கொண்டு வீடு ஒன்றைக் கட்டியுள்ளார்.

சா பாலோ மாகாணம், இடாவ்காவை (Itaoca) சேர்ந்த இவோன் மார்டின் என்பவர், சுற்றுப்புறத்தில் ஏராளமான கண்ணாடி போத்தல்கள் குவிந்து கிடக்கின்றமையைக் கண்டுள்ளார். இதையடுத்து அவ்வற்றைச் சேகரித்து வந்து சிமெண்ட் பூச்சுடன் வீடு கட்டியுள்ளார்.

3 மீற்றர் உயரம், 9 மீற்றர் அகலம், 8 மீற்றர் நீளம் கொண்ட வீட்டில், படுக்கையறை, சமையலறை, கழிவறையும் உள்ளன.

மிக குறைந்த செலவிலேயே வீட்டை கட்டியதாகவும், வீடு கட்ட போத்தல்களைப் பயன்படுத்தியதால் சுற்றுச்சூழல் கெடுவது தடுக்கப்பட்டிருப்பதாகவும் அப்பெண் தெரிவித்துள்ளார்.

மரநடுகை மாதத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

# மண்ணும் மரங்களும் மனிதர்களும்
# ஓர் உணர்வு பூர்வமான பந்தம்

பொ. ஐங்கரநேசன் M.Sc.GDJMC

மரங்களை நடுகை செய்வதன் அவசியம் பற்றிப் பலரும் பேசி வருகிறோம். மரங்கள் மனிதர்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான பிராண வாயுவைத் தரும். உண்ண உணவு தரும். நோய்க்கு மருந்து தரும். இருக்கக் குடில் தரும். நிற்க நிழலும், வெம்மை தணிவிக்க மழையும் தரும். வெட்டு மரமாகி ‘கை நிறையக் காசு’ தரும். இப்படி, மரங்கள் மனிதர்களுக்குத் தரும் பற்பல பயன்களைப் பட்டியலிட்டு மனிதர்கள் உயிர் வாழ மரங்களின் இன்றியமையாமையை வலியுறுத்தி வருகிறோம்.



மரங்கள் மனிதர்களுக்கு மாத்திரம் பயன் தருவன அல்ல. மலட்டுக் கோள்களுக்கு நடுவே பூமிக்கு உயிர் வரம் கொடுத்தவை தாவரங்கள்தான். பூமியில் வாழுகின்ற அனைத்து உயிரினங்களினதும் ஆதாரமே மரங்கள்தான்.

ஆனால், கைத்தொழிற் புரட்சியோடு சூழல் மையச் சிந்தனையில் இருந்து விடுபட்டு யாவற்றையும் எம்மை மையப்படுத்திச் சிந்திக்கும் மரபை வளர்த்துக் கொண்ட நாம் மரங்களையும் எமக்குப் பயன்படுகின்றவை என்ற அளவுகோலாலேயே அளக்கத் தலைப்பட்டிருக்கின்றோம். மரங்கள் எமக்கானவை என்ற இந்த மனித மையச் சிந்தனை கூட மரங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான தொடர்புகளைப் பூரணமாகத் தரிசிக்கவில்லை. மரங்களின் பயன்களைப் பற்றிப் பேசும்போது மரங்களை அறிவார்ந்த ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அணுகுகின்றோமேயன்றி மரங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மறந்து வருகின்றோம்.

மரங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான பந்தம் மிகவும் ஆதியானது. மரங்கள் எங்களின் தாய் வீடுகள். ஆதி மனிதன் மரங்களில் பரண்கள் அமைத்து வாழ்ந்தான் என்பதால் மட்டுமே மரங்கள் மனிதர்களின் தாய் வீடுகள் அல்ல. ஆதி மனிதனின் தாயாதிகள் தாவித் திரிந்து கூடிக் குலாவிய இடங்கள் மரங்கள். பரிணாமப் பாதையில் ஆதிமனிதனின் தாயாதிகளும் குரங்குகளின் தயாதிகளும் ஒரு பொது முதாதியில் இருந்தே கிளைத்துப் பிரிந்தன. இதற்கு எமது முதுகெலும்பில் கடைசி எலும்பாக உள்ள குயலலகே சாட்சி.

குரங்குகள் கிளை தாவும்போது தவறி வீழ்ந்து விடாமல் இருக்கவும், தூக்கத்தில் நிலை தடுமாறிச் சரிந்து விழாமல் இருக்கவும் தமது வால்களை ஒரு பற்றுறுப்பாகப் பயன்படுத்தி வருகின்றன. ஆனால், மனிதர்களின் பரிணாமத்தில் வால்களின் தேவை இல்லாமல் போய்விட்டது. அந்த வால் எலும்புகளே உருச்சிறுத்து குயிலலகு என்ற ஒற்றை எலும்பாக முள்ளந்தண்டின் கடைசியில் ஒட்டியிருக்கின்றது. தொழிலற்ற பதாங்க உறுப்பாக இருந்தாலும் குயிலலகு எலும்பில் ஆபத்துக்கு உதவும் எத்தனம் ஆச்சரியப்படும் விதத்தில் இன்றளவும் குடிகொண்டு இருக்கிறது.

மரக்கிளைகளில் நாம் ஊஞ்சல் கட்டி ஆடும்போது ஊஞ்சல் உயரே செல்லும் ஒவ்வொரு தடவையும் எமது முதுகுத் தண்டின் முனை கூச்ச உணர்வெடுத்துக் குறுகுறுக்கிறது. கீழே விழுந்து விடுவோமோ என்ற பயம் ஏற்படும்போது மரக்கிளைகளைப் பற்றிவிட வேண்டும் என்ற பழைய நினைப்பில் எமது குயிலலகு எலும்பு வாலாட்டத் தொடங்குவதுதான் கூச்ச உணர்வாக எம்மால் உணரப்படுகிறது. எமது மூதாதிகளின் வீடுகள் மரங்கள்தான் என்பதற்கு இப்படி வலுவான பல ஆதாரங்கள் இருந்த போதும் புதிய வீடுகள் கட்டிக் குடிபுகத் தொடங்கியதும் வாழ்ந்த மரங்களை நன்றி மறந்தவர்களாக தறித் தழிக்கத் தலைப்பட்டிருக்கிறோம்.

மரங்கள் மனிதர்களின் ஆதிவீடுகள் மாத்திரமல்ல; ஆதித் தெய்வங்களும் மரங்கள்தான். மனிதர்கள் தெய்வங்களுக்கு உருவங்களைக் கொடுக்கும் வரை மர வழிபாட்டைக் கொண்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள். ஆதி மனிதர்கள் திறந்த வெளிகளில் நடமாடத் தொடங்கிய போது இடி, மின்னல், புயல். மழை போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கு அஞ்சி மரங்களின் கீழேயே அடைக்கலம் தேடினார்கள். கொள்ளை நோய்கள் கொத்துக் கொத்தாக உயிர்களைப் பறித்தபோது பச்சிலை மருந்து தேடித் தாவரங்களிடமே தஞ்சமடைந்தார்கள்.

இயற்கைச் சீற்றங்களில் இருந்தும் நோய்களில் இருந்தும் தங்களைக் காப்பாற்றி வருகின்ற மரங்களை அவர்கள் பின்பு வழிபட ஆரம்பித்தார்கள். இவ்வாறு மரங்களைத் தெய்வங்களாகத் தொழுத தொல்வரலாறு தமிழர்களுக்கு உண்டு. தெய்வங்களுக்கு உருவங்களைக் கற்பிதம் செய்து மரங்களுக்குக் கீழே இருத்திச் சிறு தெய்வ வழிபாடு ஆரம்பித்தபோது அதுவரை இறையாக வழிபட்ட மரங்கள் தெய்வங்களுக்கு நிழல் தரும் உறையாக மாறியது. புளியடி வைரவர், கொண்டலடி வைரவர், மருதடிப் பிள்ளையார், அத்தியடிப் பிள்ளையார், அழிஞ்சில் பிள்ளையார், அரசடி அம்மன் என்று தெய்வங்கள் மரத்தின் பெயரோடு அழைக்கப் பெறுவது இதற்கான சாட்சியம் ஆகும். பெரும்பாலான ஆலயங்களில் தல விருட்சங்களும் பலவற்றில் கோயில் காடுகளும் இப்போதும் காணப்படுகின்றன. எனினும் சிறு தெய்வ வழிபாடு பெருந் தெய்வ வழிபாடாகி சுற்று மதில் பிரகாரம், கோபுரம் என்று ஆலயங்கள் விரிவடைய ஆரம்பித்தபோது மரங்களும் தமது இறை மகிமையை மெல்ல இழக்கத் தொடங்கின.



பண்டைத் தமிழர்களுக்கும் மரங்களுக்கும் இடையிலான பிணைப்பு இறை நம்பிக்கையோடு முற்றுப் பெறவில்லை . இன்னும் ஏராளமானவற்றைத் தமிழ்ப் பண்பாட்டு மரபுகளின் பொக்கிசங்களாகத் திகழும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்து வைத்துள்ளன. தற்போதைய குடியாட்சியில் அரசுகள் தேசிய மரம், தேசிய மலர் என்ற தேசியச் சின்னங்களைக் கொண்டிருப்பதைப் போன்று முடியாட்சியில் மூவேந்தர்களும் ஒவ்வொரு மரங்களோடு தங்களை அடையாளப்படுத்தியிருந்தார்கள். சேரர்கள் பனையையும், சோழர்கள் அத்தியையும், பாண்டியர்கள் வேம்பையும் தங்களது குலக் குறிச் சின்னங்களாகக் கொண்டாடினார்கள்.

இவற்றின் மலர்களிலான மாலைகளைச் சூடிக் கொண்டார்கள். பறம்பு நாட்டை ஆண்ட குறுநில மன்னர் பாரி கொழுகொம்பு இல்லாது துவண்டிருந்த முல்லைக் கொடிக்குத் தனது தேரை ஈந்ததாகப் புறநானூற்றில் கபிலர் பாடி வைத்துள்ளார்.

சங்ககாலத்தில் போரில் ஈடுபட்ட தமிழ் மன்னர்களும் அவர்தம் படையினரும் போரின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு வகையான மலர்களைச் சூடியிருந்திருக்கிறார்கள். போர் ஆரம்பிப்பதற்கான அறிவிப்பாகப் பகைநாட்டின் ஆநிரைகள் கவரப்படுவது சங்க காலத்துப் போர் மரபு. அதன் போது வெட்சிப் பூவையும் எதிரியின் ஆள்புலத்துள் நுழையும் போது வஞ்சிப் பூவையும், கோட்டை கொத்தளங்களைத் தாக்கும்போது உழிஞைப் பூவையும், போர் உக்கிரமடையும்போது தும்பைப் பூவையும், வெற்றியின்போது வாகையையும் சூடிக் கொண்டார்கள். போர்க்களத்தில் பூவைச் சூடியவாறு பொருத வரலாறு தமிழ் மன்னர்களுக்கு மாத்திரம் உரித்தான ஒன்றாகவே இருந்துள்ளது. வேறு எவரும் இவ்வாறு செய்தனர் என வரலாறு இல்லை.

மரங்களை இரத்த உறவுகளைப் போன்றும் நேசித்தவர்கள் தமிழர்கள். மங்கை ஒருவர் புன்னை மரம் ஒன்றைத் தனது தங்கையாக உருவகித்து வளர்த்த காரணத்தால் அதன் முன்பாகத் தனது நாயகனுடன் அளவளாவ விரும்பாதவளாய் நாணிக் கோணினாள் என நற்றிணை இலக்கியத்தில் உள்ளது. தலைவனின் மலையில் இருந்து மழை நீரால் அடித்து எடுத்து வரப்பட்ட காந்தள் கிழங்கை நட்டுத் தன்னை ஆற்றுப்படுத்திய நாயகி பற்றிக் குறுந்தொகை கூறுகிறது. தென்னையினதும் கமுகினதும் கன்றுகளை நாம் இப்போதும் பிள்ளைகள் என்றுதான் கனிவோடு அழைத்து வருகிறோம். இறந்த உறவுகளின் நினைவாக மரங்களை நாட்டி அந்த உறவுகளின் பெயர்களை அம் மரங்களுக்குச் சூட்டி அழைத்த வழக்கமும் எம்மிடையே இருந்துள்ளது.

தமிழகத்தில் சத்தியமங்கலம் காட்டுப் பகுதியில் வாழும் சோளகர் என்ற பழங்குடியினரிடையே தற்போதும் அந்தச் சடங்கு நடைமுறையில் உள்ளது.

மரங்களைத் தெய்வங்களாகவும் குலக் குறிகளாகவும் உறவுகளாகவும் கொண்டாடியவர்களின் வழித் தோன்றல்கள் நாம். ஆனால் இன்று பச்சை மரங்களின்மீது எவ்விதத் தயக்கமுமின்றிக் கோடாரிகளைப் பாய்ச்சி வருகிறோம். ஒரு மரத்தை அழித்துத்தான் என்னுயிரைக் காப்பாற்ற வேண்டுமெனில் மரம் வாழட்டும் நான் சாகிறேன் என்ற சங்கப் புலவனின் உறவினர்களான நாம் இன்று எவ்விதக் கருணையும் இன்றி மரக் கொலைகளைச் செய்து வருகின்றோம். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலாரின் வாரிசுகளாக இருந்தும் நட்ட மரங்களைப் பராமரிக்காது பட்டுப் போகச் செய்கிறோம்.

அறிவியல் வளர்ச்சி எமது பண்பாட்டில் இருந்து வந்த பல நல்ல கூறுகளை இன்று புறமொதுக்கி விட்டது. அவற்றுள் மரங்களுடன் நாம் கொண்டிருந்த உணர்வு பூர்வமான அணுகுமுறையும் ஒன்று. அறிவியல் எப்போதும் அபிவிருத்தியின் பக்கம் சார்ந்ததாகவே இயங்கும். அபிவிருத்தி தன்பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும், அது மனிதர்களாக இருந்தாலுங்கூட அழிப்பதற்குத் தயக்கம் காட்டுவதில்லை . இதனாலேயே நகர அபிவிருத்தியின்போதும் வீதி அகலிப்பின் போதும் மின் வழித்தடம் மற்றும் தொலைத் தொடர்பு வழித்தடங்களை அமைக்கும் போதும் மாற்று வழிபற்றிச் சிந்திக்காமல் மரங்களைக் குற்றுயிரும் குலையுயிருமாகச் சாய்த்து வருகிறோம்.

(9 ஆம் பக்கம் பார்க்க..)

# மண்ணும் மரங்களும் மனிதர்களும்...



மரங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான உணர்வு பூர்வமான பண்பாட்டு உறவைத் தூண்டிவிட்ட நாம், மரங்களுக்கும் மண்ணுக்கும் இடையிலான உயிரோட்டமான உறவைக்கூட மறந்து வருகிறோம். மரங்களை நடுகை செய்வோம் என்று சொல்லும் இயற்கை ஆர்வலர்கள் கூட எமது மண்ணுக்குப் பொருத்தமான மரங்கள் எவை என்று சொல்வதில்லை. எந்த மரம் என்றால் என்ன எல்லாமே மரந்தானே என்ற எண்ணமே பொதுப் புத்தியில் வேரூன்றி வருகிறது. இதனால் தான் மகோகனி, தேக்கு போன்ற அயல் நாட்டு மரங்களை நடுவதில் காட்டும் நாட்டம் இந்த மண்ணுக்குச் சொந்தமான மரங்களின் மீது இல்லாது உள்ளது.

இலங்கையில் உள்ள ஈரப்பலா, கொறக் காப்புளி, காட்டுமா, எண்ணெய் மரம் உள்ளிட்ட சில தாவரங்கள் வேறு எந்த நாடுகளினதும் இயற்கைச் சூழலில் காணப்படுவதில்லை. ஒரு பிரதேசத்துக்கு மாத்திரமே உரித் தானதாகக் காணப்படும் இத்தகைய மரங்களைத் தாவர வியலாளர்கள் உள்நாட்டுக்குரிய (endemic) இனங்கள் என்கிறார்கள். தேக்கு, மகோகனி, இப்பில் இப்பில் இயூகலிப்ரஸ் ஆகியவை இலங்கைக்குப் பிற நாடுகளில் இருந்த எடுத்து வரப்பட்ட மரங்கள். இவ்வாறு புகுத்தப்பட்ட இனங்களை அந்நிய இனங்கள் (exotic) என்கிறார்கள். இந்த இரண்டு தரப்புத் தாவரங்களையும் தவிர, மண்ணின் மைந்தர்கள் என்று இந்த மண்ணுக்கு நாம் சொந்தம் கொண்டாடுவதைப்போல, மண்ணின் மரங்கள் என்று இந்த மண்ணுக்குச் சொந்தமான இன்னுமொரு தரப்பும் உண்டு.எமது பிரதேசங்க ளில் குளக்கரைகளிலும் ஆற்றங் கரைகளிலும் நெடிதுயர்ந்து நிற்கும் மருது இங்கு இயற்கையாகவே பரிணாமித்து இந்த மண்ணைத் தனது சொந்தமென ஆட்சி செய்யும் ஒரு தாவரம். அதே சமயம், இவை இந்தியாவிலும் இயற்கையாகக் காணப் படுகின்றன. இப்படி ஒரு பிரதேசத்து இயற்கைச்சூழலில்தாமாகவேவளரும்தாவரங்கள் இன்னுமொரு நாட்டிலும் இயற்கையாகவே காணப்படுமாயின் அவற்றை அந்த மண்ணுக்குச் சொந்தமான (native) இனங்கள் அல்லது சுதேசிய இனங்கள் என்கிறார்கள். ஆல், அரசு, அத்தி, புன்னை , புங்கு, வில்வம், அழிஞ்சில், இலுப்பை, நாவல், கொண்டல், தான்றி, வாகை, வேம்பு உள்ளிட்ட பல மரங்கள் எமது மண்ணுக்குச்சொந்தமானமரங்களாக உள்ளன. மலைவேம்பும் இவ்வகையினதே.

மலைவேம்பு வயலும் வயல் சார்ந்த நிலத்திணையுமான எமது மருத நிலத்துக்குச் சொந்தமான மரம். இதன் வேர் முதல் இலைத் துளிர் வரை அத்தனை பாகங்களுமே மருத்துவப் பெறுமதி மிக்கவை. தமிழ் நாட்டில் அண்மையில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவிய போது இம் மரத்தின் கசாயத்தையே தமிழக அரசு உத்தியோகபூர்வ மருந்தாக அறிவித்திருந்தது. தொன்று தொட்டுத் தமிழ் மக்களின் பிணிதீர்க்கும் நாட்டு வைத்தியராகப் பணியாற்றி வந்த இம் மரத்தை இன்று மறந்த விட்டோம். அந்நிய வரவான மகோகனி மரத்தையே மலை வேம்பு என்று தவறாகப் பெயர் சூட்டிக் கொண்டாடி வருகிறோம். உண்மை மலைவேம்பு நட்டுப் பராமரிப்பார் எவருமின்றி எமது சூழலில் காண்பதற்கு அரிதாகி வருகின்றது. யாழ். பொது நூலக நுழைவு வாசலுக்கு வெளியே இரு மருங்கும் வரவேற்பாளர்கள் போன்று இரு மலை வேம்பு மரங்கள் நிற்பதைக் காணலாம்.

சொந்த மரம் எது, அந்நிய மரம் எது என்பதை எம்மைவிட எமது சூழலில் வாழும் உயிரினங்கள் அதிகமாகத் தெரிந்து வைத்துள்ளன. ஆல், அரசு, அத்தி, இத்தி மரங்களில் குதூகலமாகக் கூடுகின்ற விதம்விதமான எண்ணற்ற பறவைகளும் பூச்சிகளும் பிற உயிரினங்களும் இதற்கான சாட்சிகள். இவை சொந்த மரங்களை நாடுகின்ற அளவுக்கு அந்நிய மரங்களைத் தேடுவதில்லை. சொந்த மரங்கள் தனிமரங்கள் அல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு காடு. இவை எண்ணுக்கணக்கில்லாத உயிரினங்களின் உணவிடமாகவும் உறைவிடமாகவும் விளங்குகின்றன. ஆனால், நாம் பத்து வருடங்களில் பல லட்சம் ரூபா பணம் கிடைக்கும் என்று சொந்த மரங்களின் இடத்தை மகோகனிகளாலும் தேக்குகளாலும் நிரப்பிக் கொண்டிருக்கிறோம்.

மரங்கள் எவற்றையுமே இயற்கை தவறாகப் படைக்கவில்லை. இயற்கை தன் பரிணாமத் தராசில் மரங்களை எடை போடும்போது அவை மனிதர்களுக்குப் பயன்படுமா என்பதை அல்லாமல் சூழலுக்கு உகந்தவையா என்பதையே கருத்தில் கொள்கிறது. மரங்களை எந்த மண்ணின் சொந்த மரங்களாக இயற்கை தோற்றுவித்ததோ அம் மண்ணின் சூழற்சமநிலையிலும் உயிர்ச் செழிப்பிலும் அவை ஆற்றி வரும் பங்கு இன்றிமையாதது. ஆனால், புதியதொரு சூழலுக்கு இடம் மாற் றப்பட்டு வலிந்து புகுத்தப்பட்ட அயற் தாவரங்க ளாகும்போது அவை சூழலின் சமநிலையைக்குழப்பிவிடுகின்றன. சிலஅந்நியன்கள் நாசகாரத் தாவரங்களாகவும் ஆகிவிடுகின்றன. இதற்கு எமது சூழலில் பரவி வரும் சீமைக்கருவேலமும், இப்பில் இப்பிலும் பரிச்சயமான எடுத்துக்காட்டு களாகும்.

இலங்கையில் தென் அமெரிக்க மரமான சீமைக்கருவேலம்(prosopis juliflora) வனவளத்திணைக்களத்தால் 1950 களில் மண்ணரிப்பைத் தடைசெய்யும் நோக்குடன் அம்பாந்தோட்டையில் அறிமுகப்படுத்தப்பட்டது. நீர்த்தாகம் மிக்க இம்மரம் 20 மீற்றர் ஆழத்துக்குக் கீழாகவும் வேரோடி நிலத்தடி நீரை வேக வேகமாக உறிஞ்சி நிலங்களை மூடி வளரக்கூடியது. இதனால், உள்ளூர் உயிர்ப்பல்வகைமை பாதிக்கப்படுவதோடு கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையும் அருகி வருகிறது. வடக்கிலும் இது ஓர் ஆக்கிரமிப்புகளை மரமாகத் தற்போது உருவெடுத்துள்ளது. மெக்சிக்கோவைத் தாயகமாகக் கொண்ட இப்பில் இப்பில் (Leucaena leucocephala) கால்நடை உணவாக இலங்கைக்கு எடுத்து வரப்பட்டது. ஆனால், வேகமாகப் பெருகும் இதன் ஆற்றலால் இந்த மண்ணின் மரங்களை இது ஓரங்கட்டி வருகிறது.

மரங்களைக் காற்றைச் சலவைசெய்யும் இயந்திரங்களாகவும் குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித் தரும் அறிவியலும், உயிர் காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும். இதற்கு நிகராக இந்த மண்ணுக்கும் எமக்கும் சொந்தமான மரங்களை அடையாளம் கண்டு அவற்றை முதன்மைப்படுத்துவதும் இன்றியமையாதது. கூடவே அந்நிய மரங்களின் அறிமுகத்தின் போது இரட்டிப்புக் கவனமும் கட்டாயமானது. மர நடுகை பற்றியும் சூழல் பாதுகாப்புப் பற்றியும் பேசும்போது இவற்றைக் கணக்கில் எடுக்காமல் எவையும் முழுமை பெறாது.

**(கட்டுரையாளர் தமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவரும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சரும் ஆவார்.)**

# தமிழர் தீர்வு பற்றிக் கோட்டாவிடம் வலியுறுத்துவார் இந்தியப் பிரதமர்!

## விக்னேஸ்வரன் நம்பிக்கை



யாழ்ப்பாணம், நவ. 22

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து இந்தியா பிரஸ்தாபிக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு. இணைந்த வடக்கு – கிழக்கில் சுயநிர்ணய உரிமைகள் அடிப்படையிலான தீர்வு ஒன்றை இந்தியா ஏற்படுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. இதனை பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு செய்யும் என்று தமிழ் மக்கள் முழுமையாக நம்புகின்றார்கள்.

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள கேள்வி பதில் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

கேள்வி:– இந்திய வெளிநாட்டமைச்சர் இலங்கைக்குப் பயணம் செய்து புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துச் சென்றிருப்பது குறித்தும் இந்தச் சந்திப்பின் பின்னர் கோட்டாபய இந்தியாவுக்குப் பயணம் செய்யவுள்ளார் என அறிவிக்கப்பட்டிருப்பது குறித்தும் உங்களின் கருத்து என்ன?

பதில்:– ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவி ஏற்ற மறுநாளே இந்திய வெளிநாட்டமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கொழும்பு வந்து சந்தித்து சென்றிருக்கின்றமை அரசியல் ரீதியில் மிகவும் முக்கியமானது என்றே நான் கருதுகின்றேன். தெற்காசிய பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் போன்ற விடயங்களில் இந்தியாவுக்குப் பலத்த கரிசனை உண்டு. அதன் நிகழ்ச்சித் திட்டங்களில் இலங்கையின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதில் இந்தியா கொண்டிருக்கும் ஆர்வத்தை இது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

அதேவேளை, இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைக் கொண்டுவருவதில் இந்தியா தனக்கு இருக்கும் கடப்பாட்டை புரிந்துகொண்டுள்ளது. அதன் காரணமாக புதிய ஜனாதிபதிக்கும் புதிய அரசுக்கும் ஆலோசனைகளை இந்தியா கொடுக்கும் என்று நான் ஆழமாக நம்புகின்றேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளும்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து இந்தியா பிரஸ்தாபிக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு. இணைந்த வடக்கு கிழக்கில் சுயநிர்ணய உரிமைகள் அடிப்படையிலான தீர்வு ஒன்றை இந்தியா ஏற்படுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. இதனைப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு செய்யும் என்று தமிழ் மக்கள் முழுமையாக நம்புகின்றார்கள்.

ஏற்படுத்தப்படும் எந்த ஒரு தீர்வும் நிலையானதாகவும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். குறிப்பாகத் தமிழ் மக்கள் தமது பூர்வீகப் பகுதிகளில் தமது பாரம்பரியம், அடையாளம் மற்றும் பொருளாதார வளம் ஆகியவற்றைத் தாங்களே நிர்வகிக்கும் வகையில் காணி மற்றும் பொருளாதார விடயங்களில் முழுமையான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் வகையில் தீர்வு அமையவேண்டும்.

தனி ஒரு மதத்துக்கு முன்னுரிமையையும் சிறப்பு சலுகையையுங்கொடுப்பது எந்தளவுக்கு ஏனைய சமூகங்களின் மனித உரிமைகள் மற்றும் கலாசாரங்களைப் பாதிக்கும் என்பவை எல்லாம் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். ஆகவே, இறுதி தீர்வு தொடர்பில் எல்லா தமிழ் கட்சிகள் மத்தியிலும் கருத்து ஒற்றுமையை ஏற்படுத்தும் பொருட்டு கலந்துரையாடல்கள் நடைபெற வழி வகுப்பப்பட வேண்டும்.

ஐந்து கட்சிகளும் தற்போதும் 13 கோரிக்கைகளை வலியுறுத்துவதாக அறிவித்தால் எம்முள் ஒருவர் எமது கருத்தொற்றுமையை புதிய அரசிடமும் இந்தியாவிடமும் வலியுறுத்தலாம் – என்றுள்ளது. (ஐ)



## ஒரு போட்டிக்கான பந்துகளுக்கே 36 லட்சம் ரூபா செலவு!

ஒரு கிரிக்கெட் போட்டிக்காகப் பயன்படுத்தப்படும் பந்துகளுக்கு மட்டும் இலங்கை மதிப்பில் 36லட்சம்ரூபாசெலவிடப்படவுள்ளது என்றால் உங்களால் நம்ப முடிகின்றதா?

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள பகலிரவு டெஸ்ட் போட்டிக்காகவே இந்தப் பெரிய செலவு ஏற்பட்டுள்ளது.

இந்தியா - பங்களாதேஷ் இரண்டு அணிகளுக்கும் இந்த ஆட்டமே முதலாவது பகலிரவு ஆட்டமாகும். இதனால் வலைப் பயிற்சி, வீரர்களின் தனிப்பட்ட பயிற்சி என்று 70 இளம்சிவப்புப் பந்துகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

பகலிரவு டெஸ்ட்களில் பயன்படுத்தும் இளம்சிவப்பு பந்து மிக விலையானது. இலங்கை மதிப்பில் ஒரு பந்து சுமார் 51 ஆயிரம் ரூபா. 70 பந்துகளுக்குமாக சேர்த்தால் 35 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவை எட்டுகிறது பட்ஜெட்.

# லசித் மலிங்கவின் ஓய்வில் மாற்றம்!

இலங்கை ரி – 20 கிரிக்கெட் அணியின் தலைவரும், முன்னணி வேகப்பந்து வீச்சாளருமான லசித் மலிங்க, தனது ஓய்வு முடிவினை மாற்றிக்கொண்டுள்ளார்.

சர்வதேச ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுப் பெற்ற லசித் மலிங்க, தற்போது ரி – 20 சர்வதேச போட்டிகளிலும், வெளிநாட்டு ரி – 20, ரி – 10 தொடர்களிலும் விளையாடி வருகின்றார்.

இந்த நிலையில், 36 வயதான மாலிங்க, எதிர்வரும் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ரி – 20 உலகக்கிண்ணத் தொடருடன் ஓய்வுப் பெற போவதாக அறிவித்தார்.

எனினும், தற்போது ரி – 20 போட்டிகளில் சிறப்பாக பந்துவீசி வரும் மலிங்க, எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு விளையாடத் தீர்மானித்துள்ளார்.

இதற்கிடையில் தற்போது அபுதாபியில் நடைபெற்றுவரும் 10 ஓவர்கள் கொண்ட ரி – 10 தொடரில் நொர்தென் வொரியர்ஸ் அணிக்காக விளையாடி வரும் மாலிங்க, தனது எதிர்காலக் கிரிக்கெட் குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில் –

'ரி – 20 உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கை அணித்தலைவராக செயற்பட வேண்டும் எனக் கிரிக்கெட் சபை கூறியுள்ளது. ஆனால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது தொடர்பில் தெரியாது. எவ்வாறாயினும், ரி – 20 போட்டிகளில் 4 ஓவர்கள் மாத்திரமே வீசவேண்டும். எனது திறமையைப் பயன்படுத்தி என்னால் விளையாட முடியும்.

உலகளவில் நடைபெற்று வரும் ரி – 20 தொடர்களில் நான் விளையாடியுள்ளேன். அந்த அனுபவம் எனக்கு உள்ளது. எனவே, ஒரு பந்துவீச்சாளராகவும், ஒரு சிறந்த அணித்தலைவராகவும் என்னால் செயற்பட முடியும். அத்துடன், நான் இன்னும் 2 வருடங்களுக்கு ரி – 20 போட்டிகளில் விளையாட முடியும் என நம்புகிறேன்.

இலங்கை அணி திறமையான பந்துவீச்சாளர் ஒருவர் இல்லாமல் தடுமாறுகிறது. குறிப்பாகப் பந்துவீச்சாளர்களிடம் தொடர்ந்து நேர்த்தியாக பந்துவீசும் தன்மை குறைவு. அதனை ஒன்று அல்லது ஒன்றரை வருடங்களில் சரிசெய்து விட முடியாது. நாம் பொறுமையாக இருக்க வேண்டும்.

இதற்கு மூன்று ஆண்டுகள் எடுக்கலாம். அதற்கு வீரர்களின் நிலைத் தன்மை அவசியம். தேர்வுக்குழு இதில் அவதானம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக இளம் வீரர்களுக்கு என்னால் உதவி கிடைக்கும் என்றால் நான் அவர்களுடன் இருக்க வேண்டும். அவர்களுக்குச் சொல்வதை விட, இப்போது என்னால் இப்படிதான் செய்ய வேண்டும் என்பதைக்




காண்பிக்க முடியும். ஆனால், நான் விளையாடாவிட்டால், வீரர்களுக்கு எவ்வாறான திறமையைக் காண்பிக்க வேண்டும் என்பதை என்னால் காண்பிக்க முடியாது' எனக் கூறினார்.

கடந்த 2011ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற மலிங்க, கடந்த ஜூலை மாதம் ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுப் பெற்றார். எனினும், தொடர்சியாக ரி – 20 கிரிக்கெட்டில் விளையாடி வருகின்றார்.

# பங்களாதேஷ் பிறீமியர் லீக்கில் ஆடவுள்ள 5 இலங்கை வீரர்கள்

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் பங்களாதேஷில் இடம்பெறவுள்ள பங்களாதேஷ் பிரீமியர் லீக் 'ருவென்ரி 20' கிரிக்கெட் தொடரின் வீரர்கள் ஏலம் கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்து நடத்தும் இந்த கிரிக்கெட் தொடரில் 7 அணிகள் பங்குபெறுகின்றன.

இத்தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் 439 வெளிநாட்டு வீரர்கள் அடங்கலாக மொத்தமாக 620 கிரிக்கெட் வீரர்கள் விண்ணப்பித்திருக்கின்றனர்.

எனினும் வீரர்கள் ஏலத்தில் வெறும் 33 வெளிநாட்டு வீரர்களே தொடரில் பங்கெடுக்கும் 7 அணிகளினாலும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனர். அதில் இலங்கையைச் சேர்ந்த 5 கிரிக்கெட் வீரர்கள் உள்ளடங்குவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தசுன் ஷானக்க மற்றும் குசல் பெரேரா போன்ற அதிரடி துடுப்பாட்ட வீரர்கள் கொமில்லா வோரியர்ஸ் அணிக்காக ஆடவிருக்கின்றனர். அதேநேரம், அவிஷ்க பெர்னாந்து சட்டொக்ரம் சேலஞ்சர்ஸ் அணியினால் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றார்.



இதேவேளை, இலங்கை 'ருவென்ரி 20' அணியின் முன்னாள் தலைவரான திசர பெரேரா, டாக்கா பிளாட்டூன் அணிக் காக ஆடவிருக்கின்றார். சுழல்பந்து சகலதுறை வீரரான ஜீவன் மெண்டிஸ் சில்லெட் தன்டர்ஸ் அணிக் காக விளையாட இருப்பது குறிப்பிடத்தக்கது.









# ரஷ்யா அணியை வீழ்த்தி ஸ்பெயின் அணி வெற்றி!

ரென்னிஸ் உலகக் கிண்ணம் என அனைவராலும் பேசப்படும், டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரில் தற்போது முதல் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

ஆண்கள் ரென்னிஸ் விளையாட்டில், ஒரு முதன்மையான, பன்னாட்டு அணி விளையாட்டுப் போட்டியாக விளையாடப்படும் டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடர், கிட்டத்தட்ட ஆண்டு முழுவதும் நடைபெறும்.

ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா என 18 அணிகள் இத்தொடரில் பங்கேற்கின்றன. இதில் ஆறு அணிகள் மூன்று குழுக்களாக இத்தொடரில் பங்கேற்கின்றன.

இதில், போட்டியொன்றில் இரண்டு ஒற்றையர் பிரிவு போட்டிகளும், ஒரு இரட்டையர் பிரிவு போட்டியும் நடைபெறும்.

தற்போது நடைபெற்று வரும், நடப்பு ஆண்டுக்கான டேவிஸ் கிண்ண தொடரில், முதல் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

ரொபின்ரவுண்ட்முறையில் நடைபெற்றுவரும் இத்தொடரில், நேற்று நடைபெற்ற முதல்சுற்றுப்போட்டியொன்றில், ஸ்பெயின் அணியும், ரஷ்யா அணியும் மோதின.

இதில் முதலாவதாக நடைபெற்ற ஒற்றையர் பிரிவு போட்டியில், ஸ்பெயினின் ராபர்டோ பாடிஸ்டா அகுட்டும், ரஷ்யாவின் ஆண்ட்ரி ரூப்லெவ்வும் பலப்பரீட்சை நடத்தினார்.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், 3 – 6, 6 – 3, 7 – 6 என்ற செட்கணக்குகளில் ரஷ்யாவின் ஆண்ட்ரி ரூப்லெவ் வெற்றிபெற்றார்.

இந்த வெற்றியின் மூலம், ரஷ்யா அணி 1 – 0 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஒற்றையர் பிரிவு போட்டியில், ஸ்பெயினின் ரபேல் நடாலும், ரஷ்யாவின் கரேன் கச்சனோவ்வும் மோதிக் கொண்டனர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், 6 – 3, 7 – 6 என்ற நேர் செட் கணக்குகளில் ரபேல் நடால் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஒட்டு மொத்த தொடரின் போட்டி, 1 – 1 என்ற கணக்கில் சமநிலைப் பெற்றது.

இதனையடுத்து வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது போட்டி பரபரப்படைந்தது. இதில் இரட்டையர் பிரிவில்



ஸ்பெயின் அணியின் மார்சல் கிரெனோலர்ஸ் – பெலிசியானோ லோபாஸ் ஜோடி, ரஷ்யாவின் கரேன் காச்சனோவ் – ஆண்ட்ரே ருப்லேவ் ஜோடியை எதிர் கொண்டது.

இரசிகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இப்போட்டியில், 6 – 4, 7 – 6 என்ற நேர் செட் கணக்குகளில் ஸ்பெயின் ஜோடி, வெற்றிபெற்றது.

இதன்மூலம் ஒட்டு மொத்த தொடரில், 2 – 1 என்ற கணக்கில் ஸ்பெயின் அணி வெற்றி பெற்றது.

# கார்த்திகைப் பூச்சூடிக் கோலாகலமாக யாழில் ஆரம்பமான மரநடுகை மாத மலர்க் கண்காட்சி











வடக்குமாகாணசபையின் பிரகடனத்துக்கு அமைவாக ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. இதை முன்னிட்டுத் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மலர்க் கண்காட்சி கார்த்திகைப் பூச்சூடி விருந்தினர்களால் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அணியின் தலைவர் த.யுகேஸின் தலைமையில் நடைபெற்ற இம் மலர்க் கண்காட்சித் தொடக்க விழாவில் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் சி.சிறிசற்குணராசவும், கௌரவ விருந்தினராகத் தமிழகத்தின் பிரபலகவிஞரும் பாடலாசிரியருமான யுகபாரதியும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந் நிகழ்ச்சியில் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தொடக்க உரையாற்ற, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், ஐக்கியசோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்கஜயசூரிய ஆகியோர் சிறப்புரைகளைஆற்றியிருந்தனர்.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்த இவ் விழாவில் தொன்மம் கலைக்குழுவின் பறை இசைநிகழ்ச்சியும் நீர்வை பொன் சக்திகலாகேந்திரா நிறுவனத்தின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றிருந்தன.

இவ் விழாவில் சுற்றுச்சூழல் நடவடிக்கைகளில் பங்கேற்கும் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழுகின்ற 50 மாணவர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் முகமாக துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வடக்கின் தாவர உற்பத்தியாளர்கள் காட்சிக் கூடங்களை அமைத்துள்ள இம் மலர்க்கண்காட்சி எதிர் வரும் 25 ஆம் திகதிவரை நடைபெறும் எனவும், கண்காட்சியைப் பார்வையிட வருகின்ற மாணவர்கள் அனைவருக்கும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கி வைக்கப்படுமெனவும் தமிழ்த் தேசியபசுமை இயக்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# இனநல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான புதிய செயல்திட்டம் முன்வைக்கப்படவேண்டும்

## மு.கா. பிரதித் தலைவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை



கொழும்பு, நவ. 22

இன நல்லிணக்கத்தைக்கட்டியெழுப்புவதற் கான புதிய செயல் திட்டமொன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிமுகம் செய்யவேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வருமான நஸிர் அஹமட் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய 7ஆவது ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றது முதல் பல்வேறு புதிய திருப்பங்கள் செயலாக்கம் பெற்று வருகின்றன. குறிப்பாக இனவாத அமைப்புகள் எனக் கருதப்பட்டு வந்த பொதுபலசேனா அமைப்பு மற்றும் நவ சிங்களராவய போன்றன தமது அமைப்புகளைக் கலைத்து விடுவதற்கு முன் வந்திருக்கின்றமைசிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்நிலையில் நடந்து முடிந்த தேர்தலின் பின்னராக துருவ மயப்பட்டுள்ள இனங்களுக்கு இடையிலானஐக்கியத்தையும்நல்லிணத்தையும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமானதும் அவசரமானதுமான பணியாகும்.

நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறு பான்மை மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் பெரும்பான்மையின வேட்பாளர்களுக்குதான் வாக்களித்துள்ளார்கள் என்ற யாதார்த்தத்தைப் பெரும்பான்மை மக்கள் மத்தியில் பதியச் செய்ய வேண்டியதும் உணரச் செய்யவேண்டியதும் மிக அவசியமானதாகும்.

எனவே, இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ புதிய செயல்திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யவேண்டும். அதனூடாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளாகவும் அவர்தம் அபிலாஷைகளாகவும் இருந்தவிடயங்களுக்கு தீர்வுகளை எட்டக் கூடிய அம்சங்களை அறிமுகம் செய்யவேண்டும்.

அத்தோடு அவ்வாறு அறிமுகம் செய்யப்படும் அம்சங்களை பெரும்பான்மை மக்கள் புரிந்து, ஏற்றுக்கொண்டு அவர்களது ஆதரவுடன் சிறுபான்மை மக்களின பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை எட்டக் கூடிய வழிவகைகளை மேற்கொள்ள முன் வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் - என்றுள்ளது. (ஐ)

# சாதாரண தரப் பரீட்சை 02 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, நவ. 22

2019ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர பரீட்சை, டிசெம்பர் 02ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

4,987 பரீட்சை நிலையங்களில் இடம் பெறவுள்ள பரீட்சையில் 7 இலட்சத்துக்கும் அதிகமானபரீட்சார்த்திகள்தோற்றவுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir



# ஓய்வூதியத்தை இழக்கவுள்ளனரா 69 நாடாளுமன்ற உறுப்பினர்கள்?

கொழும்பு, நவ. 22

நாடாளுமன்றம் உடனடியாக கலைக்கப்படுமாயின் 69 எம்.பிக்கள் தமது ஓய்வூதியத்தை இழக்க நேரிடும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் 17ஆம் திகதி இடம் பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் முதன்முறை யாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இந்தநிலை ஏற்பட்டுள்ளது

கடந்த வருடம் மைத்திரிபாலசிறிசேன சடுதியாக நாடாளுமன்றத்தைக் கலைத்திருந்த சந்தர்ப்பத்திலும் இவ்விவகாரம் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியிருந்து. எனினும், நாடாளுமன்றக் கலைப்பு செல்லாது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து கலங்கிப் போயிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிம் மதிப் பெருமூச்சு விட்டனர். தற்போது அந்த விவகாரம் மீண்டும் பேசு பொருளாகியுள்ளது.

புதிய ஜனாதிபதியின் கீழ் கட்சித் தலைவர்களின் விருப்பப்படி நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படுமாயின் 69 பேரின் கதி அதோகதியாகிவிடும் என்றும் கூறப்படுகிறது.

புதிய ஜனாதிபதியின் அமோக வெற்றியுடன், நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வோம் என்று எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அடிப்ப டைச் சம்பளமாக மாதாந்தம் 54 ஆயிரத்து 265 ரூபா வழங்கப்படுகின்றது. அதனடிப்படையில் ஓய்வூதியமாக அவர்களது அடிப்படைச் சம்பளத் தில் மூன்றில் ஒரு பங்கான 18,095 ரூபா கிடைக்கும்.

அதேவேளை, சம்பளத்தை விட பல்வேறு சாதாரண, விசேட கொடுப்பனவுகளும், சலுகைகளும், சௌபாக்கியங்களும் நாடாமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கின்றன.அவற்றைச் சேர்த்துக் கணக்கிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாதாந்தம் 5 இலட்சத்துக்குக் குறையாமல் வருமானத்தை ஈட்டுவர் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அரசமைப்பின்படி நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நான்கரை வருடங்கள் முடிந்த பின்னர் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

அவ்வாறாயின் தற்போதைய நாடாளுமன் றத்தை நான்கரை வருடங்கள் கழித்து கலைக்கக் கூடிய அதிகாரபூர்வ காலம் 2020 பெப்ரவரி 17ஆம் திகதியாகும்.

அதேவேளை தற்போதைய நாடாளுமன்றத்தின் 5 வருடப் பதவிக் காலம் 2020 ஓகஸ்ட் 17ஆம் திகதியோடு நிறைவு பெறுகின்றது.

# ஷானி அபேசேகரவின் பதவி பறிபோகிறதா?



கொழும்பு, நவ. 22

பாரிய குற்றங்கள் தொடர்பிலான மர்மங்களைத் துலக்கிய, அனுபவம் மிக்க, குற்றப் புலனாய்வாளரான குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகர, அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டு வேறு கடமைகளில் அமர்த்தப்படவுள்ளார் எனப் பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகரவை சி.ஐ.டி. பணிப்பாளர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, அந்தப் பதவிக்கு தற்போது பொலிஸ் சூழல் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பளராக இருக்கும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் டப்ளியூ. திலகரத்னவை நியமிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த தகவல்கள் மேலும் கூறின.

புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய பாதுகாப்புச் செயலாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் அவரின் கீழ் வரும் பொலிஸ் திணைக்களத்தின் சி.ஐ.டி.யின் முக்கிய பதவியான பணிப்பாளர் பதவியில் மாற்றம் ஏற்படுத்த தேசிய பொலிஸ் ஆணைக் குழு ஊடாக நடவடிக்கைகள் மற்றும் நகர்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அந்தத் தகவல்கள் உறுதி செய்தன.

நீண்டகாலமாக சி.ஐ.டி.யின் குற்றப் புலனாய்வாளராகக் கடமையாற்றி வரும் ஷானி அபேசேகர, சி.ஐ.டி. பொறுப்பதிகாரியாக, உதவி பொலிஸ் அத்தியட்சராக, பொலிஸ் அத்தியட்சராக, பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்த நிலையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சராக தரமுர்த்தப்பட்ட பின்னர் கடந்த 2017 ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி சி.ஐ.டி.யின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழர் இனப் பாகுபாடு பார்த்திருந்தால் சிவாஜிலிங்கத்துக்கே வாக்களித்திருப்பர்

## கோடீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



அம்பாறை, நவ. 22

தமிழ் மக்கள் இனப் பாகுபாடு பார்த்தோ, மதப் பாகுபாடு பார்த்தோ இந்தத் தேர்தலில் வாக்களிக்கவில்லை என அம்பாறை மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அவ்வாறு இனப் பாகுபாடு பார்த்து தமிழ் மக்கள் வாக்களித்திருந்தால் அவர்கள் சிவாஜிலிங்கத்துக்கே வாக்களித்திருப்பார்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அம்பாறையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி அனைத்து மக்களையும் ஒரே பார்வையில், ஒரே குடையின்கீழ், இன, மத, மொழி பாகுபாடு அற்ற முறையிலே இலங்கைப் பிரஜைகள் என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் மனதையும் வெல்லக் கூடிய வகையில் தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். தமிழ் மக்களின் நோக்கமும் சிந்தனையும் எண் ணமும் தங்களது இன விடுதலை சம்பந்தமாகவும் அரசியல் தீர்வு சம்பந்தமாகவும் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து வடகிழக்கில் பயணிக்கவேண்டும் என்பதுதான். அதனை அவர்கள் உலகத்துக்குப் பறைசாற்றியிருக்கிறார்கள்.

அதனடிப்படையிலேதான் இம்முறை வடக்கு – கிழக்கு தமிழர்கள் ஒன்றுசேர்ந்து வெற்றி கண்டிருக்கிறார்கள்.குறிப்பாக தமிழ் மக்கள் இனப் பாகுபாடு பார்த்தோ, மதப் பாகுபாடு பார்த்தோ இந்தத் தேர்தலில் வாக்களிக்கவில்லை. இனப் பாகுபாடு பார்த்து தமிழ் மக்கள் வாக்களித்திருப்பார்களானால், அவர்கள் சிவாஜிலிங்கத்திற்கு வாக்களித்திருப்பார்கள் – என்றார். (ஐ)

# பொம்பியோவுக்கு கோட்டாபய பதில்

கொழும்பு, நவ. 22

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ருவிற்றரில் வாழ்த்து தெரிவித்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவுக்கு, ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத் தேர்தலை நடத்திய இலங்கை மக்களைப் பாராட்டுகிறோம். பாதுகாப்புத் துறை சீர்திருத்தம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மதித்தல் ஆகியவற்றில் இலங்கையின் உறுதிப்பாட்டை நிலைநிறுத்த இலங்கையுடனும், ஜனாதிபதியுடனும் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம் என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு டுவிட்டரில் பதிலளித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் மற்றும் முதலீட்டை மேம்படுத்த இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கிறோம் என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ குறிப்பிட்ட பொறுப் புக்கூறல் உள்ளிட்ட கடந்த கால விவ காரத்தைத் திரும்பிப் பார்க்கவும் தயாராக இல்லையென்பதை, கோட்டாபய ராஜபக்ஷ தனது பதில் மூலம் குறிப்பால் உணர்த்தியுள்ளார். (ஐ)





வடமாகாண
மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

காலைக்கதிர் Kalaikathir



# அரசு – புலிகளுக்கு இடையிலான சண்டையை சிங்கள – தமிழ் மோதலாக சித்திரித்தமை தவறு!

## நாமல் எம்.பிக்குப் பிறந்தது ஞானம்

கொழும்பு, நவ. 22

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான மோதலாக சித்திரிக்கப்பட்டமை பிழையான விடயமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வெளிவிவகாரக் கொள்கை குறித்து முற்போக்கான அணுகுமுறையை கடைப் பிடிக்கின்றார் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு



கூறினார்.

ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கை, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் மத்தியிலான உறவுகள் குறித்து பிழையாக அர்த்தப் படுத்தப்பட்டதுடன் தலைவர்களுக்கும் பிழையான செய்தி தெரிவிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய எல்லைக்கப்பால் உள்ள பிராந்திய நாடுகளுடன் உறவுகளை வலுப் படுத்துவதில் இந்தியப் பிரதமர் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்றும் இதனை தாங்களும் நம்புகிறார்கள் எனவும் நாமல் குறிப்பிட்டார்.

இலங்கை மக்களின் ஆணையை ஏற்றுக்கொண்டமைக்காக இந்திய பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ஷ, இலங்கையில் ஸ்திரமான அரசு அமைவது இந்தியாவுக்கும் சிறந்த விடயம் எனவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தமிழ்நாடு அரசியல்வாதிகளில் சிலர் தங்கள் தனிப்பட்ட நலன்களுக்காக இலங்கை விவகாரத்தைப் பயன்படுத்துகின்றனர் என நாமல் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர்கள் இலங்கை தமிழர்களுக்காக என்ன செய்துவிட்டார்கள் எனக் கேள்வி யெழுப்பியுள்ள அவர், இந்த அரசியல்வாதிகள் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு ஏதாவது செய்துள்ளார்களா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை 30 வருடங்களாக யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது என்றும் தாங்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போராடிய போதிலும் – துரதிஷ்டவசமாக இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் எதிரான மோதலாகச் சித்திரிக்கப்பட்டமை முற்றிலும் பிழையானது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## புதிய ஜனாதிபதியைச் சந்தித்து வாழ்த்தினார் இராணுவத் தளபதி



புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோருக் கிடையிலான சந்திப்பொன்று நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று ஜனாதிபதிக்கு இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தனது வாழ்த்துக் களைத் தெரிவித்துகொண்டமையுடன், முப்படைகளின் தளபதியினால் வழங்கப்பட்ட வழி காட்டுதல்களின்படி, இராணுவமானது தேசிய கடமைகளை நிறைவேற்றுவதற்காகச் சிறந்த ஒத்துழைப்பை வழங்கும் என்றும் உறுதிப் படுத்தினார்.

புதிய ஜனாதிபதியின் கடமைபொறுப் பேற்றுதலை முன்னிட்டு இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா புதிய ஜனாதிபதிக்கு நினைவு சின்னம் ஒன்றையும் வழங்கி வைத்தமை குறிப் பிடத்தக்கது.

## நிதி மோசடி விசாரணைப் பிரிவு விரைவில் மறுசீரமைக்கப்படும்

கொழும்பு, நவ. 22

பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவு மறுசீரமைக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மறுசீரமைக்கப்பட்டு சட்டம் அமுல்படுத்தப்படும் நிறுவனமாக அது மாற்றியமைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் நிதிமோசடி விசாரணை பிரிவு கடந்த காலங்களில் அரசியல் பழிவாங்கலுக்குப் பயன்படுத்தப் பட்டதாகவும் அவர் குற்றம் சுமத்தி யுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிமுகப்படுத்திய தேர்தல் கலாசாரமானது, சர்வதேச தேர்தல்களில் சிறப்பு அடையாளம் எனவும் அவர் இதன்போது சுட்டிக் காட்டினார். (ஐ)

## ஓமந்தை காணியொன்றில் வெடிபொருட்கள் மீட்பு



வவுனியா, நவ. 22

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதர் பனிக்கர் மகிழங்குளம் பகுதியில் இருந்து பழுதடைந்த நிலையில் வெடிபொருள்களை மீட்டுள்ளனர் என ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அந்தப் பகுதியில் உள்ள தனியார் காணியைத் துப்பரவாக்கிய காணி உரிமையாளர் மண்ணில் புதையுண்ட நிலையில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதை அவதானித்தார். இந்த விடயம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் நீதிமன்ற உத்தரவைப் பெற்று அதனை அகற்றவுள்ளார் எனத் தெரிவித்தனர்.

## 50 வீத சிறுவர்களுக்கு விட்டமின் டி குறைபாடு!

கொழும்பு, நவ. 22

நாடளாவிய ரீதியிலுள்ள சிறுவர்களில் 50 வீதமானோர் விட்டமின் டி குறைபாட்டுடன் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொரளை மருத்துவ ஆய்வு நிலையத்தின் விசேட வைத்திய நிபுணர், டொக்டர் ரேணுகா ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலை, பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறுவர்கள் முற்பகல் 10 மணியளவிலும் பிற்பகல் 2 மணியளவிலும் 5 முதல் 10 நிமிடங்கள் வரை திறந்தவெளியில் இருப்பது அத்தியவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## மஹிந்தவுக்கு மோடி வாழ்த்து!




கொழும்பு, நவ. 22

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இடைக்கால அரசின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இந்த நிலையிலேயே தனது டுவிட்டர் தளத்தின் ஊடாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு பாரதா ஜனதா கட்சியின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமியும் வாழ்த்து கூறியுள்ளார். (ஐ)